# கோபுரம்

தகவல் இதழ்
பங்குனி -1996

உள்ளே ......


* சித்திரை மாத நினைவுகள்
* சித்தர்களின் பாடல்கள்
* கன்மமும் மறுபிறப்பும்
* சைவமும் கலைகளும்
* மகிழ்ச்சியின் முக்கியத்துவம்
* அருளாளர் வரிசையில் ...... கண்ணப்ப நாயனார்




இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவராத்திரி விழா





மகா சிவராத்திரி வைபவத்தின் போது லிங்கோற்பவப் பூஜை நிகழ்வதையும், பக்தர்கள் வழிபடுவதையும் படத்திற் காணலாம்.



மகா சிவராத்திரி விழா நிகழ்ச்சியின் போது, கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி ஆலய ஆஸ்தான கலைஞர்கள் நாதஸ்வரம் இசைப்பதையும், பார்வையாளர்களில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கோபுரம்

*இந்துசமய கலாசார*
*அலுவல்கள் திணைக்கள*
*வெளியீடு*

மலர் ~ 07 ❖1996❖ இதழ் ~ 01
யுவ வருடம் பங்குனி மாதம்

## எண்ணம்

இவ்வாண்டின் முதல் இதழாக இவ்விதழ் வெளிவருகின்றது.

திணைக்களத்தின் செயற்பாடுகள் பற்றிய செய்திகள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. அருள்நெறிவிழா, இலக்கிய விமர்சனம் - இன்றைய போக்குகள் எனும் கருத்தரங்கு, அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள், ஆன்மீக இலக்கியச் சொற்பொழிவுகள் ஆகியன பற்றிய செய்திகளும் ஆன்மீகக் கட்டுரைகளும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

எதிர்வரும் மாதங்களில், மாவட்டங்களில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள், மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களில் சைவசித்தாந்தக் கருத்தரங்கு, பண்ணிசைக் கருத்தரங்குகள் ஆகியன நடைபெற உள்ளன. வழமையான திணைக்களப் பணிகளும் நடைபெறும்.

கோபுரம் வாசகர்கள் தொடர்ந்தும் எமக்கு உங்களின் கருத்துக்களை எழுதி உதவுமாறு வேண்டுகின்றோம்.

கோபுரம் இதழ் பற்றிய உங்கள் எண்ணங்களை கீழ் வரும் முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.

பணிப்பாளர்,

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,

98, வோட் பிளேஸ்,
கொழும்பு -7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திணைக்களச் செய்திகள்

## நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்பு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் இலங்கை எழுத்தாளர்கள் வெளியிடும் நூல்களின் ஒரு குறிப்பிட்ட தொகுதியைக் கொள்வனவு செய்து வருகின்றது. இங்ஙனம் கொள்வனவு செய்யப்படும் பலதரப்பட்ட நூல் களின் தொகுதிகள், நாட்டின் பல பாகங்களிலும் இயங்கும் பொது நூலகங்களுக்கும், தமிழ் மகா வித்தியாலயங் களில் இயங்கும் நூலகங்களுக்கும் அன்பளிப்பு செய்யும் வைபவம் ஒன்று கடந்த நவம்பர் 20ஆம் திகதி முற்பகல் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது.

திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்மு கலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. ஆர். யோகநாதன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சி யில் 'புத்தகக்கலாசாரம் - தமிழ்ச்சூழலில் அதன் அவசியம்' என்னும் தலைப்பில் பேராசிரியர். கா. சிவத்தம்பி அவர்களும், 'கல்வியும் நூலக விருத்தியும்' என்னும் தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழக சமூக, விஞ்ஞானத்துறைத் தலைவர் திரு. சோ. சந்திரசேகரன் அவர்களும் சிறப்புரை நிகழ்த்தினர்.

இவ்வைபவத்திற்கு நாட்டின் பல பிரதேசங் களில் இருந்தும் வருகை தந்திருந்த பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள் என்ப வற்றுக்குப் பொறுப்பான பிரதி நிதிகளுக்கு நூல் தொகுதிகள் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், பிரதிப்- பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர், திரு. வீ. விக்கிரமராஜா, ஆகியோரால் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சிக்கு கலாசார உத்தியோ கத்தர்கள் திருமதி. நிர்மலா கருணானந்தராஜா, செல்வி. எம். இராஜேஸ்வரி ஆகியோர் பொறுப்பாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அருள்நெறி விழா

சமய எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் சிறப்புநிகழ்வான அருள் நெறி விழா கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 6ம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடை பெற்றது.

திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முக லிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஆர். யோகராஜன் அவர் களும், கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு ஆர். யோகநாதன் அவர்களும் வருகை தந்து சிறப்பித்தனர். இவ்வைபவத்தின் போது, சமய நூல்களை எழுதி வெளியிட்டுள்ள பதினாறு எழுத்தாளர் களுக்கு சான்றிதழும், ஐயாயிரம் ரூபாவுக்கான காசோலையும் வழங்கப்பட்டன.

*அமைதியும், பொறுமையும் மனிதனின் ஆற்றலை அதிகரிக்கச் செய்கின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*நூலகங்களுக்கு நூல் வழங்கும் நிகழ்ச்சியில். பேராசிரியர் சோ. சந்திரசேகரன். பேராசிரியர். கா. சிவத்தம்பி ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்துவதையும். பார்வையாளர்களில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.*

**இவ்விழாவில் கௌரவிக்கப்பட்ட எழுத்தாளர்களின் விபரம் பின்வருமாறு:-**

01. திரு. எஸ். கதிரவேலு (கதிரமலையான், ஊரெழு)
02. திரு. வீ. வீரசொக்கன் (உடப்பு)
03. ஞானசிரோன்மணி வித்துவான் வ. செல்லையா (மானிப்பாய்)
04. திரு. கு. சோமசுந்தரம் (தெகிவளை)
05. சைவநன்மணி ஆர். மயில்வாகனம் (கொழும்பு-13)
06. பிரம்மஸ்ரீ திரு. சோ. குஹானந்தசர்மா (கொழும்பு-13)
07. சைவநன்மணி ந. செல்லப்பா (கொழும்பு - 04)
08. சைவநன்மணி, புலவர் சி. விசாலாட்சி (கொழும்பு-15)
09. பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் (யாழ்ப்பாணம்)
10. திருமதி கலைவாணி இராமநாதன் (யாழ்ப்பாணம்)
11. திரு எஸ். தில்லைநாதன் (மட்டக்களப்பு)
12. பண்டிதர் மா. மாணிக்கம் (அளவெட்டி)
13. சைவப்புலவர் பொன். தெய்வேந்திரன் (தெல்லிப்பழை)
14. சிவஸ்ரீ சி. கணேசலிங்க குருக்கள் (தெல்லிப்பழை)
15. திரு. க. தங்கவேலாயுதம் (செட்டிப்பாளையம்)
16. திரு எஸ். கோபாலசிங்கம் (மட்டக்களப்பு)

***ஆழ்மனத்துக்குள் அமைதியைத் தேடமுடியாதவன் புற உலகில் எப்படித் தேட முடியும்?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவின் சிறப்பம்சமாக, செல்விகள் சூரிய கலா கணேசன், அனுஷா நிர்மாலி குணவர்த்தன ஆகியோரின் அர்ப்பணாஞ்சலி எனும் நடன நிகழ்ச்சி இடம் பெற்றது. பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்களது நன்றியுரையுடன் விழா நிறைவு பெற்றது.

## தைப்பொங்கல் கலைவிழா

மத்திய மாகாண இந்துமாமன்றம், கண்டி இந்து இளைஞர் மன்றம் ஆகியவற்றின் அநுசரணையுடன் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திய தைப்பொங்கல் கலைவிழா ஜனவரி மாதம் 20ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ, சி. இராஜரட்ணம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் கௌரவ. லக்ஸ்மன் கிரியெல்ல, மத்திய மாகாண கைத் தொழில், கால்நடை அபிவிருத்தி, வர்த்தக வாணிப, சுற்றுலா இந்து கலாசார அமைச்சர் கௌரவ, வீ புத்திரசிகாமணி, கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர், திரு. இ. யோகநாதன், இந்துசமய கலாசார திணைக்களப் பணிப்பாளர், திரு. க. சண்முகலிங்கம், மத்திய மாகாண கல்வி அமைச்சின் உதவிச்செயலாளர் திரு. என். தேசோமயானந்தம், மத்திய மாகாண இந்து மாமன்றத் தலைவர் திரு. அ. துரைசாமிப் பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

மங்கள இசையுடனும், மத்திய மாகாண சபை கலாசார உத்தியோகத்தர் திருமதி. நளாயினி சுப்பையா அவர்களின் தேவாரத்துடனும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

குறிஞ்சிநாடன் திரு. சே. வெள்ளைச்சாமி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில், கவிஞர்கள் சு. முரளீதரன், குறிஞ்சித் தென்னவன், செல்வி. ந. பாலரஞ்சனி சர்மா, ஈழக்குமார் ஆகியோர் பங்கு கொண்டனர்.

அடுத்து இடம்பெற்ற உரையரங்கில், கண்டி, இந்து இளைஞர் மன்றத்தலைவர் திரு. அ. தட்சணாமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அறிமுகவுரை வழங்கினார்.

தொடர்ந்து, திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் தமது தலைமையுரையில், திணைக்கள வெளியீடான அமரர் ஆத்மஜோதி நா. முத்தையாவின் "பன்னிருமாத நினைவுகள்" எனும் நூல் பற்றிய அறிமுகத்தை வழங்கினார். அத்துடன் இந்நூற் பொதிகள் கண்டி மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.

கண்டி அசோக வித்தியாலய அதிபர் திரு. செ. நடராஜா அவர்களின் நன்றியுரையுடன் உரையரங்கு நிறைவு பெற்றது.

கலையரங்கு நிகழ்ச்சியில், கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரி மாணவியரின் இராமாயணக் காட்சி நடனம். மத்தியமாகாண இந்துமாமன்ற நுண்கலை வகுப்பு மாணவியரின் முப்பொருள் தேவியர் பரதநாட்டியம், கதகளி, இசைநிகழ்ச்சி விகாரமகாதேவி மகளிர் வித்தியாலயத்தினரின் உழவர் நடனம், கண்டி பெண்கள் உயர்தரப்

***காலைப்பொழுதின் சில கணங்களை இறைவனுக்காக அர்ப்பணித்தால் அன்றைய தினம் அற்புதங்களை நிகழ்த்தும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை, மாணவியரின் தை மகளே வா மெல்லிசை, பொங்கல் பொங்குவோம் குழுநடனம், கலஹா இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை திரு. பச்சைமுத்து அவர்களின் மாணவர் வழங்கிய கரகம், கண்டி இந்து சிரேஷ்ட வித்தியாலயத் தினரின் குழு இசை நிகழ்ச்சி என்பன இடம் பெற்றன.

க.ப.சிவம் ஆகியோர் இடம்பெற்றிருந்தமை குறிப் பிடத்தக்கது.

☆ ☆ ☆



*இலக்கிய விமர்சனம் பற்றிய கருத்தரங்கில். பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் உரையாற்றுவதையும். பார்வையாளர்களில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.*

பொங்கல் கலைவிழாவின் ஒருங்கிணைப்புச் செயலாளராக இந்துசமய ஆலோசகர் திருமதி ஞா. ஞானசேகர ஐயர் பணியாற்றினார்.

பொங்கல் விழாக் குழுவில், மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் திரு துரை. மதியுகராஜா, திரு. வீ விமலவன், திரு. க. செல்லமுத்துப் பிள்ளை, திரு. வி. மாரிமுத்துப்பிள்ளை, அகிலம் ஆசிரியர் , திரு. கே. வி. இராமசாமி, திரு. பெ. இராஜநாதன், குன்றின் குரல் ஆசிரியர், திரு. அந்தனி ஜீவா, பிரபல பத்திரிகையாளர் திரு.

## வெலிக்கடையில்
## பொங்கல் சிறப்புப் பூ ஜை

திணைக்களத்தின் ஏற்பாட்டில் கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள இந்து மதச் சிறைக்கைதிகளுக்கென விஷேட பொங்கல் பூஜைகள் தைமாதம் 15ம் திகதி காலை 10 மணிக்கு நடைபெற்றன.

மருதானை கப்பிதாவத்தை ஸ்ரீ செல்வவிநாய கர் ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ ச. ஜெயராம் சர்மா

***ஆயுதங்கள் ஆபத்தானவை அல்ல - மனதின் தீய உணர்வுகளை விடவும்!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பூஜையை நடத்தி வைத்தார். சிறைச்சாலை ஆணையாளர், உதவி ஆணை யாளர், நலன்புரி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் இப்பூஜைகளிற் கலந்து கொண்டனர்.

பொரளை, அரிமா சங்கத்தின் அனுசரணை யோடு நடைபெற்ற இப்பூஜைகளுக்கான ஏற்பாடு களை திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் மேற்கொண்டிருந் தார். இந்நிகழ்ச்சியில் திணைக்கள உத்தியோ கத்தர்கள் திரு. க. செல்லத்துரை, திரு. ஜே.ஏ. அமிர்தநாயகம் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஆகியோர் களுத்துறை மாவட்டத்திலுள்ள சில ஆலயங்களுக்கு விஜயம் செய்தனர்.

இவ்விஜயத்தின் போது, இங்கிரிய, றைகம மேற்பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், களுத்துறை கல்கடுவ ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், பொல்கஹகந்த ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், கொலன்ராப் டிவிஷன் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம், மத்துகம பன்னில கந்த ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் என்பவற்றை பார்வையிட்டனர். அத்துடன், தமிழ்வித்தியாலயங் கள், பொதுநூலகங்கள் என்பனவற்றுக்கு வழங்கப்



*இலக்கியச் சொற்பொழிவு நிகழ்ச்சியில். பேராசிரியர். பா. நமசிவாயம் அவர்கள் உரையாற்றுவதையும். கட்டத்தில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.*

**திணைக்கள அதிகாரிகள் களுத்துறை விஜயம்**

கடந்த டிசம்பர் மாதம் 10ம் திகதி திணைக் களப்பணிப்பாளர், திரு. க. சண்முகலிங்கம், உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா

படும் திணைக்கள நூற்தொகுதிகள், இங்கிரிய றைகம கீழ்ப்பிரிவு தமிழ் வித்தியாலயம், இங்கிரிய மேற்பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான அறநெறிப்பாடசாலை, புலத்சிங்கள மிரிசேன தமிழ்வித்தியாலயம், ஹொரண பிரதேச சபை

***உங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றுவீர்களாயின் நீங்கள் வருந்த வேண்டிய நிலை ஏற்படாது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம், புலத்சிங்கள கொபவெல தமிழ் வித்தியா லயம் என்பவற்றைச் சார்ந்த பிரதிநிதி களுக்கு திரு. சண்முகலிங்கம் அவர்களும், திரு. விக்கிர மராஜா அவர்களும் நூற்தொகுதிகளை அன்பளிப் புச் செய்தனர்.

## தமிழ் இலக்கிய விமர்சனம் இன்றைய போக்குகள்

திணைக்களம் ஒழுங்கு செய்திருந்த 'தமிழ் இலக்கிய விமர்சனம் இன்றைய போக்குகள்' என்ற தலைப்பிலான இரண்டுநாட் கருத்தரங்கு, நவம்பர் மாதம் 24, 25ம் திகதிகளில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடை பெற்றது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி எம். ஏ. நு.்.மான், திரு. மு. பொன்னம்பலம், திரு க. சண்முகலிங்கம், திரு. கே. எஸ். சிவகுமாரன் திரு. எல். ஜோதிகுமார், கலாநிதி சோ. கிருஷ்ண ராஜா ஆகியோரின் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக் கப்பட்டன.

பேராசிரியர் எஸ். பாலச்சந்திரன் (பாலா) முனைவர் க. பஞ்சாங்கம், பிரபல எழுத்தாளர் சுந்தரராமசாமி ஆகிய தமிழக விமர்சகர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் இறுதிநேரத்தில் அவர் களின் வரவு தடைப்பட்டது. முனைவர் க.பஞ் சாங்கம் அனுப்பிய ஆய்வுக்கட்டுரை படிக்கப் பட்டது.

## பண்பாடு - 12 வது இதழ்

திணைக்களத்தின் பருவ இதழான பண்பாடு 12 வது இதழ் வெளிவந்துள்ளது. இவ்விதழில், விஞ்ஞான அறிவின் வளர்ச்சி-தோமஸ் கூனின் சிந்தனைகள் (சோ. கிருஷ்ணராஜா), திருஞான சம்பந்தரும் கலைகளும் (வி. சிவசாமி), தமிழின் இரண்டாவது பக்தியுகம் (கார்த்திகேசு சிவத்தம்பி),



*கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கின் போது. கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச்செயலாளர் திரு. இ. யோகநாதன் அவர்கள் உரையாற்றுவதையும். திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன். சைவமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. சி. தனபாலா. கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர் ஆகியோரையும் படத்திற் காணலாம்.*

***முட்களுக்கு மத்தியில் ரோஜா மலர் மணம் பரப்பிக்கொண்டிருக்கிறது -நீங்கள் எப்படி?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும் நூலக விருத்தியும் (சோ. சந்திர சேகரன்), இலங்கையில் சமூகவியல், மானிட வியல் கல்வியும் ஆய்வும் (ஸசங்க பெரேரா), கிராம சமூகங்கள் கற்பனையும் உண்மையும் (நொபொரு கராஷிமா), குறிப்புகள் (க.சண்முக லிங்கம்) ஆகிய விடயங்கள் அடங்கியுள்ளன.

## திணைக்கள வெளியீடுகள்

**பன்னிருமாத நினைவுகள்:**

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் எழுதிய இந்நூலை திணைக்களம் மீள்பதிப்புச் செய்துள்ளது. அறநெறிப்பாடசாலைகளுக்கான இலவச வெளியீடான இந்நூலில், ஒவ்வொரு வருடத்திலும் மாதாந்தம் இடம் பெறும் இந்துசமய விழாக்கள், பண்டிகைகள், விரதங்கள் என்பன பற்றிய விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

**அந்தரேயின் கதைகள்:**

சிங்கள இலக்கியத்தில் வழங்கப்பட்டு வரும் அந்தரே என்பவரைப்பற்றிய வேடிக்கைக் கதைகள், மாத்தளை சோமு அவர்களால் தமிழில் தொகுக்கப்பட்டு திணைக்கள வெளியீடாக வெளியிடப்பட்டு உள்ளன. இத் தொகுப்பில் 48 சிறிய கதைகள் உள்ளன. நூலின் விலை ரூபா-25/=

**சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியியல் ஒரு அறிமுகம்**

யாழ்ப்பாண பல்கலைக்கழக மெய்யியல்துறை தலைவர் கலாநிதி சோ. கிருஷ்ணராஜா அவர்கள் எழுதிய சைவ சித்தாந்த அறிவு ஆராய்ச்சியியல் ஒரு அறிமுகம் என்னும் நூல் திணைக்கள வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் காட்சிக் கொள்கை, அனுமானக் கொள்கை, சப்தப் பிரமாணம் போன்ற பல்வேறு விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டு உள்ளன. இந்நூலின் விலை ரூபா 25/= ஆகும்.

## நூற்பொதிகள் அன்பளிப்பு

அறநெறிப்பாடசாலை நூலகங்களை விருத்தி செய்யும் நோக்குடன் நூல்கள் திணைக்களத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டன. 1995ம் ஆண்டில் நூற் பொதிகளை அன்பளிப்பாகப் பெற்ற பாடசாலைகள் விபரம்:-

01. ஸ்ரீ சித்திவிநாயகர் அ. நெ. பா.
    137, கடற்கரை வீதி,
    நீர்கொழும்பு.
02. க/ கம்பளை இந்து இளைஞர் மன்ற அ. நெ. பா. 14, மலபார் வீதி,
    கம்பளை.
03. சைவமகாசபை அ. நெ. பா.
    ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்,
    116, புத்தளம் றோட்,
    குருநாகல்.
04. திருநாவுக்கரசு நாயனார் குருகுலம்
    மகாவித்தியாலய வீதி.
    தம்பிலுவில் - 02.
05. ஞானவாணி அ. நெ. பா.
    ஹவுப்பை எஸ்டேட்,
    தலுகலைப்பிரிவு, கஹவத்தை.
06. விபுலானந்த அ. நெ. பா.
    வாசிகசாலைக்கட்டிடம், பிரதான வீதி,
    கூளவடி.
07. மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான அ. நெ. பா.
    மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், மாத்தளை.
08. திருஞானசம்பந்தர் அ. நெ. பா.
    வீரமுனை, சம்மாந்துறை.

*ஒருவர் சம்மதிக்காத போது, இருவருக்கிடையே சண்டை மூளாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. ஸ்ரீ கந்தசுவாமி கோவில் அ. நெ. பா.
ஆறுமுகத்தான் புதுக்குளம், வவுனியா.

10. பதுளை ஸ்ரீ மாணிக்கவிநாயகர்
கதிர்வேலாயுதசுவாமி கோவில்
22, லோவர் வீதி, பதுளை.

11. மயூரபதி இந்துசமய அ. நெ. பா.
17ஏ, மயூரபதி, ஹவ்லொக் வீதி,
கொழும்பு -06.

12. சரஸ்வதி அ. நெ. பா.
லூல்கந்துர தோட்டம், தெல்தோட்டை.

13. இந்து உமாதேவி மன்ற, அ. நெ. பா.
தலங்கா தோட்டம், 90, ஏக்கர் பிரிவு,
நாக்கியாதெனிய.

14. ஸ்ரீ கற்பகா. அ. நெ. பா.
மே/பா விபுலானந்தா தமிழ் வித்தியாலயம்,
மொனராகலை.

15. பதுளை அம்பிகை அ. நெ. பா.
ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானம்,
இம்புல்கொட, ரொக்கில், பதுளை

16. காயத்திரி அ. நெ. பா.
கிறேட்வெஸ்றன், கல்கந்தவத்த,
தலவாக்கலை.

17. க/ கதிரேசன் ம. மகாவித்தியாலய
அ. நெ. பா. நாவலப்பிட்டி.

18. ஸ்ரீ செல்வவிநாயகர் அ. நெ. பா.
இல. 79, நுவரெலியா வீதி,
பாராதெக்க, கண்டி.

19. ஸ்ரீ முத்துமாரியம்மன் அ. நெ. பா.
இ/ பரியோவான் த. ம. வி.
இறக்குவானை.

20. ப/ ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி
அ. நெ. பா. இந்தகலை,
39, பள்ளகெட்டுவ.

21. இந்து இளைஞர் மன்ற அ. நெ. பா.
246, பிரதான வீதி,
திருகோணமலை.

22. வடகொழும்பு இந்துபரிபாலனசங்கம்,
40, கோவில் வீதி,
கொழும்பு. 15

23. திருநாவுக்கரசர் அ. நெ. பா.
களு/ பயாகல தமிழ் வித்தியாலயம்,
தொடங்கொடை.

24. கலைவாணி ஸ்ரீமுருகன் ஆலய
அ. நெ. பா.
2ம் குறுக்குத்தெரு, புத்தளம்.

25. நம்பி அறநெறிப்பாலர் பாடசாலை,
இந்து இளைஞர் மன்றம்,
புதுக்குடியிருப்பு.

## இசைக்கருவிகள் அன்பளிப்பு

அறநெறிப்பாடசாலைகளில் பண்ணிசைப் பயிற்சிக்கு முதன்மை அளிக்கப்படுகின்றது. 1995ம் ஆண்டில் சுருதிப்பெட்டி, தாளம் ஆகிய இசைக்கருவிகளை அன்பளிப்பாகப் பெற்ற பாடசாலைகள் விபரம்:-

01. ஸ்ரீ கலைமகள் அறநெறிப் பாடசாலை
இலுக்குதன்ன தோட்டம்,
கீழ்ப்பிரிவு,
தெரணியாகல.

02. மாளிகாவத்தை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய
அறநெறிப் பாடசாலை
இல. 59, மாளிகாவத்தை,
கொழும்பு - 10

***உங்களுக்கு நீங்கள் நல்லவராக இருங்கள்; உலகும் உங்களுக்கு நல்லதாக இருக்கும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. இந்து கலாசார முத்தமிழ் சங்க
அ. நெ. பா
265/15 , காலி வீதி,
கொழும்பு - 03.

04. இராமகிருஷ்ண ஞாயிறு பாடசாலை,
40, இராமகிருஷ்ண வீதி,
கொழும்பு - 06.

05. ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி ஆலய அறநெறிப் பாடசாலை,
இந்து மகா சிங்கம்,
செட்டிபொல வீதி, குளியாப்பிட்டிய.

06. மாத்தளை முத்துமாரியம்மன் தேவஸ்தான அறநெறிப்பாடசாலை
மாத்தளை முத்துமாரியம்மன் தேவஸ்தானம்,
மாத்தளை.

07. ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை
இ/ பரியோவன் தமிழ் வித்தியாலயம்,
இறக்குவானை.

08. ஸ்ரீ. கற்பகா அறநெறிப்பாடசாலை
மே/ பா விபுலானந்த தமிழ் வித்தியாலயம்
மொனராகல.

09. ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி அறநெறிப்பாடசாலை
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்,
பன்சல வீதி, பண்டாரவளை.

10. பாரதி அறநெறி பாடசாலை
தெல்தோட்ட குருப், கலஹா.

11. மலையக தமிழ் சங்க அ. நெ. பா
இல. 13, லேடி மெக்கலம் டிறைவ்,
நுவரெலியா.



*நூலகங்களுக்கான நூல் அன்பளிப்பு வைபவத்தின் போது திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா நூற்பொதி ஒன்றைக் கையளிப்பதைப்படத்திற் காணலாம்.*

***உங்களைத் திருத்துவதற்கு அதிகநேரத்தைப் பயன்படுத்துங்கள்; அப்போது பிறரை விமர்சிப்பதற்கு நேரமிருக்காது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஸ்ரீ மாணிக்கவிநாயகர் கதிர்வேலாயுத சுவாமி அறநெறிப்பாடசாலை
இல. 22, லோவர் வீதி, பதுளை.

13. சுத்தானந்த இந்து இளைஞர் மன்றம் வவுனியா.

14. ஸ்ரீ முருகன் ஆலய அறநெறி பாடசாலை குருக்கள் மடம்.

15. கோவிற்கடவை அறநெறிப்பாடசாலை கரவெட்டி, யாழ்ப்பாணம்.

16. தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய அறநெறிப்பாடசாலை
பிரதான வீதி, தம்பிலுவில்.

## தேசியதினக் கொண்டாட்டம்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 48வது தேசிய தினக் கொண்டாட்டத்தையொட்டி பெப்ரவரி மாதம் 4ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி தேவஸ்தானத்தில் காலை 6.30 மணிக்கு இந்துசமய அனுஷ்டானங்களுடன் விஷேட பூஜை, வழிபாடு என்பன இடம்பெற்றன.

இவ் வைபவத்தில் தோட்ட வீடமைப்பு பொதுவசதிகள் பிரதியமைச்சர் மாண்புமிகு. பி. சந்திரசேகரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆர். யோகராஜன் அவர்கள், கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு ஆர். யோகநாதன் ஆகியோரும் இவ்வைப வத்தில் உரையாற்றினர். திணைக்களப்பணிப் பாளர் திரு. க. சண்முகலிங்கம், பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல், கடற்றொழில், நீரியல்வள அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. கா. தயாபரன், மற்றும் ஸ்ரீ கைலாசநாத சுவாமி ஆலய பரிபாலன சபையினர், பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டு இந்நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.



*இசைக்கச்சேரி நிகழ்ச்சியில். திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் பாடகருக்கு மாலையிடுவதையும். பார்வையாளர்களில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.*

***மனம் விரும்பி ஆற்றும்பணி புத்துணர்வைத் தரும். விருப்பமற்ற செயல் களைப்பையே உண்டுபண்ணும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழோடு இசை பாடல்

திணைக்களம் நடத்திய தமிழோடு இசை பாடல் எனும் "உரை, இசை விளக்க" நிகழ்ச்சி பெப்ரவரி மாதம் 8ம் திகதி மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. இ. யோகநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் தமிழ்நாடு, திருப்பனந்தாள் கலைமா மணி, திருமுறைக் கலாநிதி திரு. கோ. முத்துக் கந்தசாமி தேசிகர் அவர்கள் "தமிழோடு இசை பாடல்" எனுந்தலைப்பில் இசையோடியைந்த உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சிக்கு பக்கவாத்தியக் கலைஞர் களாக -வயலின் திரு. எஸ். சோமஸ்கந்த சர்மா, மிருதங்கம் திரு. வி ஜம்புநாதன் ஆகியோர் தங்கள் பங்களிப்பை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் பணிப்பாளர் திரு க. சண்முக லிங்கம், பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு.குமார் வடிவேல் ஆகியோரும் பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## 'பண்ணிசை'

திணைக்களம் நடாத்தும் இந்துமதப் பேருரைத் தொடரின் எழுபத்தெட்டாவது பேருரை பெப்ரவரி மாதம் 10ம் திகதி சனிக்கிழமை மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் சிறிய மண்டபத்தில் நடைபெற்றது.

திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அருள்மொழிச் செல்வர் க. நாகேஸ்வரன் எம். ஏ அவர்கள் "பண்ணிசை" எனும் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியின் போது தமிழ்நாடு திருப்பனந் தாள் ஆதீன வெளியீடுகளான திருமுறை, சைவசித்தாந்த நூல்களின் கண்காட்சியும் இடம்பெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களப் பணிப்பாளர் திரு. க சண்முகலிங்கம் நிகழ்ச்சியைத் தொடக்கிவைத்துப் பேசிய போது திரு.நாகேஸ்வரன் திணைக்களத்துடன் வைத் துள்ள தொடர்பினையும், அவரது ஆர்வத்தையும் குறிப்பிட்டார்: நூல் கண்காட்சி விற்பனை என்பன திணைக்களத்தினால் தொடர்ந்து செயற்படுத்தப் படவுள்ளதாகவும் கூறினார். திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

## மகாசிவராத்திரி விழா

கொழும்பு, கப்பிதாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன தமிழ்ச்சேவை என்பன இணைந்து நடத்திய மகாசிவராத்திரி விழா வைபவ நிகழ்ச்சிகள் பெப்ரவரி 17ம் திகதி ஆலய மண்டபத்தில் நடைபெற்றன.

முழுநாள் இரவும் நான்கு சாமப் பூஜையும் அதிகாலை 4.40 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும், எம்பெருமான் உலாவருதலும் இடம் பெற்றன.

ஆலயத்தில் விஷேடமாக அமைக்கப்பட்ட அரங்கில், கலாசூரி, திருமதி. கௌரீஸ்வரி

***மனம் அமைதியோடிருக்க வேண்டுமாயின், எந்த வேளையிலும் மனதின் சமநிலை கெடாது காத்துக் கொள்க.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜப்பன் அவர்களின் திருமுறைக்கச்சேரி, செல்வன். ஹரி பாஸ்கரன் குழுவினரின் கர்நாடக இசை, திருமதி அனுஷியா தர்மராஜாவின் நாட்டியக்ஷேத்திரா மாணவியர் வழங்கிய "சிவாஸ்துதி" நாட்டியம், தேசிய கல்வி நிறுவனம் திரு. குமாரசுவாமி சோமசுந்தரம் அவர்களின் சிவராத்திரி மகிமை எனும் சிறப்புரை, தமிழ்நாடு, கலாமந்திர் டாக்டர். திருமதி சகுந்தலா இராமசுவாமி குழுவினரின் பக்திப்பாடல்கள், அருட்கலைத்திலகம் திரு. பி. சோமஸ்கந்தர் குழுவினரின் "சிவஜோதி" வில்லிசை, அருட்கலைத்திலகம், திரு பி. வி. இராமன் அவர்களின் திருமுறைப் பாடல்கள், ஸ்ரீ கைலாசநாதர் ஆலய ஆஸ்தான நாதஸ்வர வித்துவான் எம் பி. வி. சேகர் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

இந்நிகழ்ச்சியில் கலாசார சமய அலுவல்கள் அமைச்சு செயலாளர் திரு இராஜகருண, மேலதிக செயலாளர் திரு. எல். சுகுணதாசா இந்து விவகாரத்திற்குப் பொறுப்பான மேலதிக செய லாளர் திரு. இ. யோகநாதன், இந்துசமய கலா சார திணைக்கள பணிப்பாளர் திரு. க. சண்முக லிங்கம், பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு குமார் வடிவேல் ஆகியோரும் பல பிரமுகர்களும் பங்கு பற்றினர்.

திரு. குமார் வடிவேல் அவர்கள் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்.

## இசைக்கச்சேரி

திணைக்களத்தின் அனுசரணையோடு, இசைக்கச்சேரி நிகழ்ச்சி ஒன்று மார்ச் மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

நாதஸ்வரம், இன்குழல்வேந்தன் ஸ்ரீ. எம். பி. நாகேந்திரன் , வயலின் ஸ்ரீ. பா. கண்ணன் , மிருதங்கம் கலாபூஷணம், ஸ்ரீ. ஏ. சந்தான கிருஷ்ணன், தவில் லயஞானதிலகம் ஸ்ரீ. வி. குமரகுரு ஆகிய கலைஞர்கள் இந்நிகழ்ச்சியிற் கலந்து கொண்டு இன்னிசை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் திணைக்கள பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், உதவிப்பணிப்பாளர் திரு. குமார்வடிவேல் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒரு நாட் பயிற்சி கருத்தரங்கு

கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்துடன் இணைந்து திணைக்களம் நடத்திய அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒருநாட் பயிற்சிக் கருத்தரங்கு மார்ச் மாதம் 9ம் திகதி மேற்படி நால்வர் மணிமண்டபத்தில் பிரதிப்பணிப் பாளர் திருமதி சாந்தி. நாவுக்கரசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. ஆர் யோகநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முக லிங்கம், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு சி. தனபாலா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

***வாழ்க்கை நாடகத்தில் உங்கள் பாத்திரத்தைச் சரிவரப்புரிந்து கொண்டால் மகிழ்வு மிஞ்சும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*அருள்நெறி விழாவிற்குப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆர். யோக ராஜன். சமய எழுத்தாளருக்கு சான்றிதழைக் கையளிப்பதையும். கலாசார அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. இ. யோகநாதன். திணைக்களப் பணிப்பாளர் திரு.க.சண்முகலிங்கம் ஆகியோ ரையும் படத்திற் காணலாம்.*

"அறநெறிப் பாடத்திட்டத்தின் நோக்கமும் செயற்பாடும்" எனுந் தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் ஞானசிரோன்மணி திருமதி. பூமணி குலசிங்கம் அவர்களும், "புராண இதிகாசங்களிற் கூறப்படும் அறநெறிக் கருத்துக்கள்" எனுந் தலைப்பில் ஞானசிரோன்மணி, திருமதி. வசந்தா, வைத்தியநாதன் அவர்களும், 'சமூகவிழுமியங்கள்' எனுந் தலைப்பில் மகரகம தேசிய கல்வி நிறுவக ஆலோசகர், திரு. கு. சோமசுந்தரம் அவர்களும், "அன்புடமை" எனும் பொருளில் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. இ. ஆறுமுகம் அவர்களும், திரு சிவ மகாலிங்கம் அவர்களும் விரிவுரை நிகழ்த்தினர்.

கருத்தரங்கின் நிறைவில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களும், நூல்களும் முறையே திருமதி சாந்தி நாவுக்கரசன், திரு சி. தனபாலா, திரு. கு. சோமசுந்தரம் ஆகியோரால் வழங்கப்பட்டன.

திணைக்களத்தின் கலாசார உத்தியோகத்தர், திருமதி நிர்மலா கருணானந்தராஜாவின் நன்றியுரையுடன் கருத்தரங்கு நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.

---

**மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசைநடனக் கல்லூரி நான்காண்டு டிப்ளோமா கற்கை நெறிக்கான இறுதியாண்டுப்பரீட்சை - 1995**

*சித்தியடைந்தோர் விபரம்:-*

1. 2ம் வகுப்பு உயர்பிரிவில் சித்தியடைந்தோர்:
   யூடித் அந்தோனிட்பிள்ளை (வாய்ப்பாட்டு)
   சிவதர்சினி சுப்பிரமணியம் (பரதம்)
2. 2ம் வகுப்பு கீழ்ப்பிரிவில் சித்தியடைந்தோர்:-
   தேவகுமார் சுந்தரநாதன் (வாய்ப்பாட்டு)
   உமாராணி பேரின்பராஜா (வயலின்)
   சடாட்சரி வடிவேல் (வாய்ப்பாட்டு)

---

***நீங்கள் மிகவும் முக்கியமானவர்; உங்கள் பங்குக்கடமையை உங்களால் மிகச் சிறப்பாக ஆற்ற முடியும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீற்றா நிர்மலா அற்புதராஜா (வாய்ப்பாட்டு)

3. சாதாரண பிரிவில் சித்தியடைந்தோர்:-
ருக்மணி சோமசுந்தரம் (வாய்ப்பாட்டு)
யோகேஸ்வரி சந்தனம் (வாய்ப்பாட்டு)
ஜெஸ்லின் ஜீவகுமாரி யோசெப் (வாய்ப்பாட்டு)
செல்வராணி லூட்ஸ் செபமாலை (வீணை)
ஈஸ்வரி மயில்வாகனம் (வாய்ப்பாட்டு)
சியாமிளா பாலசுப்பிரமணியம் (வயலின்)
விஜீந்திரா மயில்வாகனம் (வாய்ப்பாட்டு)

*சித்தியடையாதோர் விபரம்:-*
1. கலாநிதி வேலுப்பிள்ளை (பரதம்)

## பேராசிரியர் நொபொரு கராஷிமா சொற்பொழிவு

திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த ஆங்கிலச் சொற்பொழிவு நிகழ்ச்சி ஒன்று மார்ச் மாதம் 14ம் திகதி மாலை கொழும்பு, இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக் குழுவின் பிரதித் தலைவர் பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஜப்பான், டோக்கியோப் பல் கலைக்கழகப் பேராசிரியரும், சிறந்த ஆய்வாளரு மான பேராசிரியர் நொபொரு கராஷிமா அவர்கள் 'தென்கீழ் ஆசியா, ஆசிய பசுபிக் பிராந்தியங்களுக் கிடையிலான வர்த்தகத் தொடர்புகள் தொல் பொருட் சான்றுகளுடனான மதிப்பீடு' எனுந் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சிக்கு, கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. இ. யோகநாதன், திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் உட்பட பல அறிஞர்கள் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சிக்கான ஒழுங்குகளை உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

## இந்துசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இரண்டுநாட் பயிற்சிக் கருத்தரங்கு

திணைக்களம், கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரத ராஜ விநாயகர் ஆலயத்துடன் இணைந்து நடத்திய இந்துசமயம் கற்பிக்கும் ஆசிரியர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இரண்டுநாள் பயிற்சிக் கருத்தரங்கு மார்ச் மாதம் 16ம், 17ம் திகதிகளில், மேற்படி ஆலய ஐங்கரன் மண்ட பத்தில் நடைபெற்றது.

முதல்நாள், திணைக்களப் பணிப்பாளர் திரு. க.சண்முகலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்கள் வரவேற் புரை நிகழ்த்தினார். வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்ம கனாநந்தாஜி மகராஜ், வரதராஜ விநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியார் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. இ. யோகநாதன் அவர்களும், ஆலய அறங்காவலர் திரு. பொ. பாலசுந்தரம் அவர்களும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

கருத்தரங்கில் "சைவ நாற்பதங்கள்" எனுந் தலைப்பில் செல்வி. யோ. முருகேசு, "சைவ மெய்யியல்" எனுந் தலைப்பில திரு. எஸ். நடராஜா, "நால்வர் வாழ்வும் வாக்கும்" எனுந்

***உங்களைச் சரிவர நீங்கள் புரிந்து கொண்டால் அமைதியும், மகிழ்வும் நிலைக்கும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பில் ஞானசிரோன்மணி வசந்தா வைத்தியநாதன், " பண்ணிசைப்பயிற்சி " எனுந் தலைப்பில் திருமதி. எஸ். தருமலிங்கம் ஆகியோர் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு, திணைக்களப் பிரதிப்பணிப்பாளார் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்கள் தலைமை வகித்தார்.

"சைவக்கிரியை நெறி விளக்கம்" எனுந் தலைப்பில் வேதாகமக் கிரியா சூடாமணி, சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள், "அபரக்கிரியை" எனுந் தலைப்பில் திருமதி. சாந்தி நாவுக்கரசன், "ஆலய அமைப்பு முறை" எனுந் தலைப்பில் சிவஸ்ரீ நாராயணக் குருக்கள், "விரதங்களும் விழாக்களும்" எனுந் தலைப்பில் கல்வித் திணைக்கள முன்னாள் உதவிப்பணிப்பாளர் திரு.கே.இ. ஆறுமுகம் ஆகியோர் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

நிகழ்ச்சியின் நிறைவில், கலந்துகொண்ட ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களை பணிப்பாளர் திரு. க சண்முகலிங்கம், ஆலய அறங்காவலர் திரு. பொ பாலசுந்தரம், திரு. கே. இ. ஆறுமுகம் ஆகியோர் வழங்கினர்.

திணைக்களக் கலாசார உத்தியோகத்தர் திருமதி. நிர்மலா கருணானந்தராஜா அவர்களின் நன்றியுரையுடன் கருத்தரங்கு நிறைவு பெற்றது.

*ஜபம் செய்யும் போது. இறைவனது நாமமும் இறைவனும் ஒன்றே என்ற எண்ணத்துடன் இறையுணர்வில் மூழ்கியிருக்க வேண்டும்.*

*ஒருவரது பெயரை உச்சரிக்கும் போது அவரது உருவம் தோன்றுகிறது. அதுபோல் இறைவன் நாமத்தை ஜபம் செய்யும் போது அவனது உருவத்தையும் நினைவில் கொள்ள வேண்டும்.*

## சமரஸப் பிரார்த்தனை

- ஸ்ரீ சுவாமி சிவானந்தா

ஓம் கருணையும் அன்பும் நிறைந்த இறைவா!
உனைத் தொழுது வணங்குகின்றோம்;
நீ எங்கும் உள்ளாய், எல்லாம் வல்லாய்,
எல்லாம் அறிவாய்.

நீ ஸச்சிதானந்தப் பொருள்...
மெய்ப்பொருளும், மெய்யறிவும், பேரின்பமும்
நீயே; எல்லா உயிர்களிலும் உறைபவன்
நீயே.

**ஓம் தயாபரத் தெய்வமே**

உணரும் உள்ளமும், சமநோக்கும் தூய
அன்பும் மெய்யறிவும் எமக்குத் தந்தருள்க;
மயக்கத்தை எதிர்க்கவும், மனதை
வெல்லவும், உள்ளத்தில் ஒளிரும் தெய்வீகத்
தன்மையை எமக்குத் தந்தருள்க.

ஆணவம், துராசை, வெறுப்பு, பேராசை,
காமம், வெகுளி இவை பற்றாது எம்மைக்
காத்தருள்க; ஆன்மீக உணர்ச்சிகளை எமது
உள்ளத்தில் நிரப்பி அருள்க.

**ஓம் உலகாளும் ஜெகதீசா!**

எல்லாப் பெயரிலும் உருவிலும் உனையே
யாம் காண்போமாக;
எல்லாப் பெயரிலும் உருவிலும் உனையே
யாம் வழிபடுவோமாக;

எப்பொழுதும் உன்னையே யாம் சிந்தித்து
வருவோமாக என்றென்றும்
உன்னிலையிலேயே
யாம் நிலைத்திருப்போமாக.

***நீங்கள் கோபமாக இருக்கும் போது பெருமளவு சக்தியை வீணாக்குகிறீர்கள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத நினைவுகள்

**ஆத்மஜோதி - நா. முத்தையா**

தமிழர் தம் ஆண்டுப் பிறப்பும் சித்திரை மாதப் பிறப்பும் இரண்டும் ஒன்றேதான். மாதத்தில் சித்திரை சிறந்ததாகவும் முதலாவதாகவும் அமைந்துள்ளது. இம்மாதத்தில் மல்லிகையும் முல்லையும் மலர்ந்து மணம் வீசி மாநிலத்தை மகிழ்விக்கின்றன. தேமாவும் தீம்பலாவும் அரும் பழங்களைப் பாருக்கு நல்கி நாவினுக்கு நல்ல சுவையினைக் கொடுப்பதும் இக்காலத்திலேதான். யக்ஞயாகம், உபநயன விவாகம் முதலிய வைதீக காரியங்களைச் செய்யவும் சிறந்த காலம். வருஷ ஆரம்பம் நன்றாக இருந்தால் ஆண்டெல்லாம் நன்மை தரும் என்பது நம் கொள்கை.

ஆறு பருவகாலங்களிற் சிறந்தது இளவேனிற் காலம். இளவேனிற் காலத்தில் முதல் மாதம் சித்திரை. ருதுக்களுள் வசந்த ருதுவாக இருக்கிறேன் என்று கீதையில் கீதாசிரியர் கூறுகிறார். சித்திரை நட்சத்திரம் பூரணையோடு கூடியகாலம் ஆதலால், சித்திரை மாதம் என்னும் பெயரைப் பெற்றது. இது இராகச் சக்கரத்திலுள்ள 12 இராசிகளுள் ஆறாவதான கன்னி ராசியிலும் ஏழாவதான துலாராசியிலுமுள்ள நட்சத்திர மண்டலத்துக்குப் பெயர். அச்சுவினி முதலாக எண்ணும் வரிசையில் பதினான்காவது. அதாவது நடுநட்சத்திரம்.

சூரியன் மகரத்திற்குப் புகுந்து உத்திரத்தை நோக்குங்கால் அக்காலத்திற்கு "மகரசங்கிராந்தி" "உத்திராயனம்" என்ற பெயர்கள் வழங்கி வருகின்றன.

மழை நீங்கிப் பகலவன் வெளிப்பட, உலகம் பிணி பீடை நீங்கி தொழில்புரிய யத்தனிக்கிறது. நடராஜப்பெருமான் "தை", "தை" என்று நடனஞ் செய்வது சிருஷ்டித் தொழிலையே குறிக்கும். மகரத்தில் பரிதி பொருந்துதலாலும் "தை" என்ற பெயர் மகரத்திற்கு ஆயிற்று. அன்றியும் செங்கதிரோன் தோற்றத்தால் உண்டாகும் உவகையை வெளியிடும் பொருட்டே வீடுவாசல் களனைத்தும் துப்புரவு செய்யப்பட்டுத் தமிழகங்களில் சூரியனுக்குப் பொங்கலிடப்பட்டு வருகின்றது. ஆதலால் "சிறப்பு" என்ற பொருளும் "தை" என்ற மொழிக்கு வாய்த்தது போலும்.

மழை நீங்கினும் வானம் மேகத்தினால் மாசுபடிந்திருப்பதனால் மாசி (மாசு+இ) என்பது அடுத்த திங்களின் பெயராம். மார்கழி முதல் நான்கு மாதம் பனிக்காலம். அப்பனி கூறுபடும் மாதம் பங்குனியாம். (பங்கு= கூறு) படிந்த மாசும் பெய்த பனியும் நீங்கவே வானம் சித்திரம் போன்று வெயிலொளிக்க அழகுறும்.

அத்திங்களில் இருபெருஞ்சுடரும் களங்கமற்ற ஒளி தரும். இரவும் பகலும் செவ்விய வானம் திசைபோன்றும், பரந்த கடல் பாவை போன்றும் விளங்கும் அப்பொருள் பற்றியே சித்திரை என்று பெயரிடப்பட்டது போலும். இத்திங்களில் மக்கள், மாக்கள், கால்நடைகள், பூண்டுகள் தழைத்து இன்புறும். வேனிலதிகரிக்க, புல் பூண்டுகள் வாடி மயங்கும். அவை காசநோய் உற்றன போலக் காணப்படும். வை (வைக்கோல்,புல்) காசம், இ-வைகாசி.

---

*கௌரவம் பெறுவதற்குத் தகுதியுடையவன், அதை வழங்குபவன் மட்டுமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரா பூரணை

சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம் கூடிய பூரணையே சித்திரா பூரணையாகும். அன்று சித்திர குப்தவிரதம் நோற்பார்கள். அந்த நாளில் பொங்கி வழியும் பால் நிலவைப்போல் மக்கள் உள்ளமும் மகிழ்ச்சியில் பொங்கித் திளைக்கும். அந்நாளில் பொங்கலிட்டுத் தெய்வங்களை மக்கள் வழிபட்டு விழாவாற்றி வந்தார்கள். ஏழைகளுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றுவார்கள். இதற்குச் சித்திரைக் கஞ்சி என்று பெயர். மாலையில் சித்திர குப்தருடைய கதையை ஒருவர் வாசிக்க மற்ற வர்கள் எல்லாரும் பயபக்தியாய்க் கேட்டு அநுபவிப் பார்கள்.

பொன், வெள்ளி இவைகளாலான பதுமையில் சித்திரகுப்தனை இருத்தி நியமப்படி வழிபாடு செய்ய வேண்டும். அன்னம், வெல்லத்துடன் கலந்த எள், பால், நெய் முதலியவை படைக்கும் பொருள்கள். வழிபாட்டின் முடிவில் பாயசம் நிறைந்த வெண்கலப் பாத்திரம் தானமாகக் கொடுப்பது வழக்கம். அன்று முழுவதும் உப்பில்லாத உணவுண்டு விரதம் இருத்தல் வேண்டும்.

மாதந்தோறும் பூரணை விரதம் அநுட்டிக்க முடியாதவர்கள் சித்திரா பூரணையாவது அநுட்டிக்க வேண்டும். இப்பூரணை விரதம் மற்றைய பூரணை விரதங்களை அநுட்டிப்பதன் பலனைக் கொடுக்கவல்லது. முதன்முறை விரதம் தொடங்கும்போது 5 அல்லது 9 கலசங்கள் வைத்து, அவைகளில் சித்திர குப்தனையும் மற்றும் எட்டுத்திக்குப் பாலகர்களையும் (அல்லது நான்கு திக்குப் பாலகர்களை) இருத்தி வழிபட்டுப் பிறகு தானம், ஓமம், பிராமண போசனம் முதலியன செய்யவேண்டும்.

காலத்துக்குட்பட்டுக் காலனை வெல்வது காலவந்தனம். காலத்தைக் - கடவுளை வழிபட்டு காலத்தை வெல்வது காலவஞ்சனம். சாவித்திரி மார்க்கண்டேயர் விஷயங்களில் யமதருமன் தன் கால தருமத்திற்கு விலக்காக நடந்து கொண்டார். சத்தியவான் விஷயத்தில் சாவித்திரி யின் அளவு கடந்த அன்பில் ஈடுபட்டுத் தன் அநுக்கிரக வாக்கைக் காக்கும் பொருட்டு வரமளித்தார். இது காலவந்தனத்துக்கு உவந்து அளித்த வரம்.

மார்க்கண்டேயனே காலனைச் சிந்தியாமல் சிவத்தைச் சிந்தித்து வந்தவன். கால நியமப்படி அவனது முடிவு காலம் வந்தபோது காலந்தகன் தன் கடமையைச் செய்ய வந்தான். ஆனால் மார்க்கண்டேயன் ஆதியந்தம் இல்லாத சுயம் பிரகாச வெளியில் சிவதரிசனத்தைக் கண்டு காலாதீதனாக விளங்கினான். அதனால் யமனின் அதிகாரம் மார்க்கண்டேயன் விஷயத்தில் தோற்றது.

மிருத்யுவை வென்று அவரையே குருவாக அடைந்தவர் நசிகேதஸ். இவர் யமன் அருளால் காலசக்கரத்தை வென்றவர். தஞ்சை மாவட்டத்தில் ஸ்ரீ வாஞ்சியம் என்ற இடத்தில் யமதேவனுக்குச் சந்நிதி இருக்கிறது. யமதேவனும் சனிபகவானும் சூரியனுடைய திருக்குமாரர்கள் என்று புராணம் கூறுகின்றது. சித்திரா பூரணையிலன்று போடப்படும் கோலத்தில் தென்புற வாசலை மூடியது போல போடுவது வழக்கம்.

## சுக்கிரவார விரதம்

சுக்கிரவாரம் என்பது வெள்ளிக்கிழமையைக் குறிக்கும். தேவியைக் குறித்து வெள்ளிவிரதம் அநுட்டிக்க விரும்புவோர் சித்திரை மாதத்து வளர்பிறையைத் தொடர்ந்து வரும் முதற் சுக்கிர வாரத்திலிருந்து பகலிலே ஒருபொழுது உண

***இறைவன் எனக்கு அன்புமிக்க அன்னை, தந்தை, குருவாயின் லௌகீக வாழ்வின் சலுகைகள் எதற்கு?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுண்டு அநுட்டிக்கும் விரதம் இது.

## பிரதோஷ விரதம்

பிரதோஷம் என்பது முற்பிறப்பிற் செய்த குற்ற நீக்கமாகும். பிரதோஷ விரதம் சிவபெருமானுக்குரிய விரதங்களுள் ஒன்று. மாதந்தோறும் உண்டாகின்ற சுக்கிலபட்சம் என்னும் வளர்பிறைக் காலத்திலும், கிருஷ்ணபட்சம் எனப்படும் தேய்பிறைக் காலத்திலும் உண்டாகின்ற பதின்மூன்றாம் நாளைப் பிரதோஷகாலம் என்பர்.

தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் பெறுவதற்காகத் திருப்பாற்கடலைக் கடைந்தபோது மந்தர மலையை மத்தாகவும், வாசுகி பாம்பைக் கயிறாகவுங் கொண்டார்கள். இரு பகுதியாரும் வேகமாகக் கடைந்த தாக்கத்தால் வேதனையுற்ற வாசுகி, ஆலகாலம் என்னும் விஷத்தைக் கக்கிற்று. அந்தவிடம் அருகில் நின்றவர்களை எரித்துத் தகித்துத் துன்புறுத்தியபோது அங்கே நின்ற திருமாலின் நிறத்தையும் நீலமாக்கிவிட்டது. விடத்தின் வேதனையைத் தாங்கமுடியாது தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டபோது, அவர் சுந்தரரை அனுப்பி விடத்தை எடுப்பித்து அடக்கி உண்டு தமது கண்டத்தில் நிறுத்தி நீலகண்டராயினார்.

## பிரதோஷ விரதத்தின் பயன்

பிரதோஷ காலத்து வழிபாடு பரார்த்தமாகவும் பயன் தருவது. நமக்காகவன்றி நம் குடும்பத்தாருக்கும் நம்மைச் சேர்ந்தவர்களுக்கும் அவ்வழிபாடு பயன் தருவதாகும். பிரதோஷ காலத்திலே நியமமாக மெய்யன்போடு சிவதரிசனம் செய்து கொண்டுவரின் கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், மரணவேதனை, பாவம் என்னும் இவைகள் நீங்கும்.

சிவபெருமானுக்குரிய விசேஷ விரதமாகிய பிரதோஷத்தைப் பற்றி சகலாகம சங்கிரகம் உத்தரகாரணம், பிரமோத்தரகாண்டம், சிவதரு மோத்திரம். முதலிய பெரிய நூல்களில் விபரமாகக் கூறப்பட்டுள்ளது. வரதுங்கராம பாண்டிய மன்னன் தாம்பாடிய பிரமோத்தர காண்டத்தில் பிரதோஷ மகிமையை 123 செய்யுள்களில் விளக்கியுள்ளார்.

## பிரதோஷ விரத முறை

பிரதோஷ விரதம் அநுட்டிப்போர் அன்று காலை நித்திரைவிட்டெழுந்து காலைக் கடன் கழித்து நீராடித் தூய்மையாகச் சிவாலயத்துக்குச் சென்று வழிபட்டு, அன்று நல்ல வழியில் அருள் நூல்களையும் தேவார திருவாசகங்களையும் ஓதிக் கொண்டிருத்தல் நன்று. அன்று மாலை சிவாலயத்துக்குச் சென்று சுவாமிக்கும் அம்பாளுக்கும் இயன்றவரையில் அபிடேகம் அர்ச்சனை ஆதியன செய்வித்து அலங்காரம் நிவேதனம் ஆகியவற்றுக்குத் தம்மாலானவரை உதவி, உபகரித்துத் திருவிழாப் பொலிவு காண்டல் வேண்டும். மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் திருவீதியை வலம் வந்து வணங்குதல் வேண்டும்.

## சனிப் பிரதோஷம்

சிவபெருமான் தேவர்களின் குற்றத்தை மன்னித்தருளி அவர்களுக்குத் தம் திருநடனத் திருக்காட்சி கொடுத்தருளியமை ஒரு சனிக்கிழமை யோடு கூடிய பிரதோஷமாகையால் சனிப்பிர தோஷம் மிக மேலானது என்பர். எனவேதான் பிரதோஷ விரதம் அநுட்டிக்கத் தொடங்குவோர் ஒரு சனிப்பிர தோஷத்தில் ஆரம்பித்து ஒரு சனிப்பிரதோஷத்தில் நிறுத்திக்கொள்ளுதல் வழக்கமாயிருக்கிறது. அத்தகைய சனிப்பிர தோஷமும் சித்திரை வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில்

*பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்தாக வேண்டும்.! எப்படி என்பதுதான் பிரச்சனை!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதாயின் மிகமிக நன்றாகும்.

## ஏகாதசி விரதம்

மாதந்தோறும் வளர்பிறைக்காலம் என்னும் சுக்கிலபட்சமும், தேய்பிறைக்காலம் என்னும் கிருஷ்ணபட்சமும் சம்பவிக்கின்றன. இவ்விரு காலத்திலும் வருகின்ற பதினோராம் நாளை ஏகாதசி என்பர். இத்தினம் அடியார்களுக்கு மிக அருமையான நாள். அவர்கள் அன்று பகல் முழுவதும் ஒன்றும் உண்ணாமல், ஒன்றும் பருகாமல் உபவாசமாய் இருந்து ஸ்ரீமந் நாராயணனைத் தொழுது தோத்திரம் செய்து தியானித்து வணங்குவர். இரவு முழுவதும் அவரை நினைந்து தியானம் செய்து அவர் புகழ் பாடிக்கழிப்பர். அடுத்த நாள் அதிகாலையில் நீராடி வழிபாடு செய்து சூரியோதயத்தின் முன் பாரணை செய்வர்.

ஏகாதசி நாளில் சோறுண்ணல் ஆகாது என்பதே விதி; உபவாசம் இருத்தல் உத்தமம். உபவாசம் இருக்க இயலாதவர் பால் பருகலாம். வேண்டுமானால் இரண்டொரு பழங்களை உண்ண லாம். ஏகாதசி விரதம் அநுட்டிப்பதால் உடம்புக்கு நல்ல உறுதியும் பயனும் உண்டாகிறது. பிறவி தோறும் செய்துவந்த பாவங்கள் நீங்குவதோடு இனி வரும் பிறப்புகளுக்கு நல்ல பயன் கிடைக் கிறது. மேலான பதவியும் கிடைக்கிறது. இவை யெல்லாம், பெரியவர்களும் தர்மசாஸ்திரம் கண்ட வர்களும் நமக்காகக் கூறியவை.

ஏகாதசி விரதத்தால பாவங்கள் நீங்க மனம் தூய்மை அடைகிறது. படிப்படியாகப் பக்தி அதிகரிக்கிறது; கடவுளிடம் பற்று வளர்கிறது. மனத் தூய்மைக்கு ஏகாதசி நாள் மிகவும் நல்லது என்பர்.

விரதம் அநுட்டிப்பதால் மனம் கட்டுப்படுகிறது. பஞ்சமாபாதகங்கள் படிப்படியாகக் குறைகின்றன. அங்குமிங்கும் அலையும் மனம் ஆற அமர ஒடுங்குகிறது. நல்ல வழியில் நம்மை நடத்தத் தயாராகிறது. தூய்மையுள்ள சிந்தனைகள் தோன்ற இடம் அளிக்கின்றது. கடவுள் பக்தியைத் தூண்டுகிறது. படிப்படியாக மனம் பரிசுத்தம் அடைந்து பக்குவப்படுகின்றது. தியானஞ் செய்ய வழி பிறக்கிறது. விரதத்தால் உணர்ச்சிகள், ஆவேசங்கள் அடங்குகின்றன. இந்திரியங்கள் அமைவாக நடக்கின்றன. தவவாழ்வு வாழ்வதற்கு வழி பிறக்கின்றது. மனம் பொறி வழி போகாது தடுப்பதற்கான விரதங்கள் பலவுள. அவற்றுள் சந்திராயணம், கார்த்திகை, ஏகாதசி, பிரதோஷம் என்பன மனச் சாந்தி அளிப்பன.

ஏகாதசி விரதத்தால் நற்பயன் பெற்றவர்களும், சாபம் நீங்கியவர்களும், துன்பம் நீங்கியவர்களும பலர். லலித கந்தர்வன், வியாபாரி ஒருவன் பாண்டவருள் பீமன். குபேரனுடைய தோட்டக்காரன் மகாஜித் என்பார், அரிச்சந்திரன், இந்திரசேனன், சோபனன் என்னும் சக்கரவர்த்தி, வைகானசன் என்னும் மன்னன், உலும்பகன் என்பான், ருக்குமாங்கதன் முதலானோர் பலவிதமாக நற் பயன் பெற்றார்கள் என்பர்.

*(திணைக்கள வெளியீடான ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் பன்னிருமாத நினைவுகள் எனும் நூலிலிருந்து).*

எல்லாவற்றையும் இறைவனிடம் அர்ப்பணித்துவிடு. மனைவி, மகன் அனைவரும் இறைவனுக்கு உரியவர்களே. உன்னுடைய கடமை அவர்களைப் பாதுகாப்பது மட்டும்தான். இந்த உள்துறவு எப்போதும் உன் மனதில் இருக்க வேண்டும்.

***நீங்கள் அதிகமான மனிதர்களில் தங்கியிருப்பீர்களாயின், ஏமாற்றமடை வதற்குரிய சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அபிராமி பட்டர்** அபிராமி அந்தாதி இயற்றிய ஆசிரியர் பெயராகும். இவருடைய இயற்பெயர் சுப்பிரமணிய ஐயர். ஊர் சோழ நாட்டிலுள்ள திருக்கடவூர். தந்தை பெயர் அமிர்தலிங்க ஐயர். அபிராமி என்பது திருக்கடவூர் அம்பிகை பெயராகும். இவர் அபிராமி அம்மன் கோயிலின் புகழ் பெற்ற அருச்சகராகக் கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் சரபோசி மன்னர் காலத்தில் திகழ்ந்தவர். இவர் எழுதிய அபிராமி அந்தாதி பக்தி இலக்கியங்களுள் பெயர் பெற்ற ஒன்றாகும். இந்நூற்பாடல்களை ஓதிவரின் அம்மன் அருள் வாய்க்கும் என்னும் நம்பிக்கை உள்ளது.

அபிராமிபட்டரைப் பற்றிச் சில நிகழ்ச்சிகள் சொல்லப்படுகின்றன. அவர் அகத்தே, அம்பிகை மேல் பேரன்பினராகத் திகழ்ந்தார்; புறத்தே, குறையுடையவர் போல் காணப்பட்டார். அறிவினை மயக்கும் சில பொருள்களை உண்ணும் பழக்கத்தினராகவும் இருந்தார். எனவே, இவர்மேல் வெறுப்பு வளர்ந்தது.

தஞ்சாவூர் வேதியர் சிலர் பட்டரைப் பற்றி மன்னர் சரபோசியிடம் முறையிட்டனர். மன்னர் திருக்கடவூர் சென்றபோது, பட்டரை அழைத்து வரப் பணித்தார். பட்டர் அழைத்து வரப்பட்டார். "கையில் என்ன வைத்திருக்கிறீர்" என்று பட்டரை நோக்கி அரசர் வினவினார். "பஞ்சாங்கம்" என்று பதிலிறுத்தார் பட்டர். உடனே, "நாளை என்ன திதி?" என்று கேட்டார் மன்னர். மறுநாள் அமாவாசை; ஆனால் வாய்தவறிப் "பௌர்ணமி" என்று விடையளித்துவிட்டார் பட்டர். நாளை மதிகெட்ட நாள், நீங்கள் மதியைக் காட்ட முடியுமா?" என்று அரசர் கேட்க, "காட்ட முடியும்; காட்டுவேன்" என்று மறுமொழி யளித்தார்.

மறுநாள் நூறு கயிறுகளில் தொங்குமாறு உறியொன்று கட்டப்பெற்றது. உறிக்குக் கீழே நெருப்பு மூட்டப்பெற்றது. உறிமேலே அமர்ந்து பட்டர், அபிராமி அம்மனைப் பாடத்தொடங்கினார். "உதிக்கின்ற .. செங்கதிர்" என்பது முதற் பாடல். முதற்பாடல் பாடப் பெற்றவுடன், உறிக் கயிறு நூறனுள் ஒன்று வெட்டப் பெற்றது. அம்மன் காட்சியளிக்கவில்லை. இறுதியில் அம்மை அருள் காட்டினாள். அம்மை, தன் கைகளை நீட்டிப் பட்டரைப் பற்றி நிலத்தில் விட்டாள்; தன் இடக்காதில் அணிந்திருந்த குண்டலத்தை வானவெளியில் எறிந்து, அதன் மிகு ஒளியை, நிலவுதயமாகக் காட்டினாள். மன்னன் வியந்தான்; ஆற்றலைப் போற்றினான்.

அபிராமி பட்டர் அச்சமயத்துப் பாடிய பத்திப் பனுவலே அபிராமி அந்தாதி என்று போற்றப்படுகிறது. அந்நூலைப் பாடி அம்மனைப் பரவுவதால், தீங்குகள் நீங்கும்; தெய்வம் தாங்கும் என்பது மக்கள் நம்பிக்கையாயிற்று.

உன்னை நீ பலவீனமானவன் என்று ஒருபோது நினைக்காதே. நீ பலவீனமானவனாக இருக்கலாம். ஆனால் நீ யாரை சரணடைந்திருக்கிறாயோ அந்த இறைவன் சர்வ சக்திமான். அவருடைய எல்லையற்ற ஆன்மசக்தியால் உன்னை சக்திமானாக நினைத்துக்கொள்.

இறைவனே தனக்கு சகலமும் என்று முழுமையாக உணர்ந்து கொள்பவன் தனது உள்ளத்திலிருந்து மிகவும் உயர்ந்த வலிமை பீறிட்டுக் கிளம்புவதை உணர்கிறான்.

சுவாமி. துரியானந்தர்

*உங்கள் இதயத்தை இறைவனிடம் தந்து விட்டால் மாரடைப்பு வராது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர்களின் பாடல்

சித்தர் பாடல் என்னும் இலக்கியம் தமிழ் நாட்டில் பலநூறு ஆண்டுகளாக மிகுந்த பக்தி யோடு ஆராதிக்கப்பட்டு வந்திருக்கிறது. படித்த மக்களைப்போலவே பாமர மக்களும் இந்தப் பாடல்களை மெய்யுருகி அனுபவித்து வந்திருக் கிறார்கள். நாட்டுப் பாடல்கள் என்று வழங்குகிற நாடோடி இலக்கியத்திலுமே இந்தச்சித்தர் பாடல் ஒரு தனியான தெய்வ மணத்தோடு கமழ்கிறது.

"வினைக்கு ஈடாய் மெய்" என்னும் திருமந்திர வாக்குப்படி, உயிரின் வினைக்குத் தக்கவாறு உடம்பு அமைகிறதல்லவா? அதுபோலவே ஒரு கவிதையின் வடிவமும், மெய்யும் அமைகின்றன. சித்தர்கள் கூறுகிற தத்துவத்திற்கு ஏற்ப அவர் களின் பாடலும் உருவ அமைப்பு எடுக்கிறது. கருத்துக்கு இயைந்த வடிவம் கொள்கிறது. மற்ற இலக்கியப் பாடல்களின் போக்கு, நடை, அமைப்பு ஆகியவற்றிலிருந்து சித்தர்களின் பாடல் மாறுபட்டிருப்பதற்கு இந்த நுட்பமே காரணமாகும்.

சித்தர் பாடல்கள் எல்லாம் ஒரே யாப்பு முறையில் அமைந்திராவிட்டாலும், இவற்றின் அமைப்பு முறையில் ஓர் ஒருமைப்பாடு இருக்கும். அந்தந்தச் சித்தரின் முதிர்ச்சிக்கும், மொழியாற் றலுக்கும் ஏற்ப யாப்புமுறை மாறினாலும், இந்தப் பாடல்கள் அனைத்திலுமே ஓர் எளிமை துலங்கும். சித்தர்களுடைய தோற்றத்தில், முகத்தில், காண்கி றோமே ஒரு குழந்தையின் பசலைத்தன்மை, ஓர் இங்கித எளிமை, அந்தப் பண்பை அவர்களுடைய பாடலின் சொற்களிலுங் காணலாம். ஆனால் ஒரு முக்கியமான உண்மையை மறந்துவிடக் கூடாது. அதாவது, எளிமை என்பது சொற்களிலே உள்ள எளிமைதான். கருத்து மிகமிக ஆழமாக இருக்கும். ஆழமான சுனை அல்லது ஏரியின் தண்ணீர் பரிசுத்தமாக இருந்தால், அடி மணல் தெரியும். அப்படிப்பட்ட சுத்தமான சுனை அந்தப் பாடல்கள். ஆனால் கருத்தாழமோ என்றால், தண்ணீருக்குள் முங்கி மணல் எடுக்கப்போனால் உள்ளே உள்ளே போய்க்கொண்டே இருக்கும். நம்முடைய ஆணவமே அதில் கரைந்து அழிந்து விடும்படியாக இருக்கும். அஃது அந்த எளிய சொற்களை தாங்கிக்கொண்டிருக்கிற தத்துவத் தின் ஆழம்; ஆன்ம ஆழம் அது!

எளிமையைப் போலவே இன்னொரு சிறப்பு என்னவென்றால், அந்தப் பாடல்களிலே அங்கங்கே உள்ள அலை வீச்சாகும். ஏரி நீர் காற்றிலே அலை மோதிக்கொண்டிருக்கும் அல்லவா? அந்த அலைகள் சிரிப்பது ஒரு சித்தனுடைய சிரிப்பாகும். அந்த அலைகள் வீசிவீசிக்கரையிலே வந்து தட்டுவது ஒரு சித்தனுடைய உல்லாச விளை யாட்டாகும்! சில சமயங்களில் சில பாடல்கள் சலனமே இல்லாமல் மோன அமைதியைப் பிரதிபலித்து நிற்கும். காற்று இல்லாத போது நடுநிசியிலே தடாகத்தின் தண்ணீர் உறங்குவது போலே, ஆழமும் மோனமும் பயபக்தி கொள்ளும் படியாகத் தோற்றம் தரும். இது சித்தர்களின் நடையிலே உள்ள சித்தியாகும்.

இனி, மூன்றாவது சிறப்பு, மிகப் பெருஞ்சிறப்பு என்னவென்றால், இந்தப் பாடல்களில் உள்ள மெய்யான உருவகம், மெய்யான உள்ளுறை.

***இறை நம்பிக்கை என்பது - பயமின்மை!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகிற சொற்களின் வெளியீடு ஒன்றாக இருக்கும் ; சொல்லப்படுகிற கருத்து மற்றொன்றாக இருக்கும். சரீரத்துக்குள் சரீரமாக ஆன்மசரீரம் இருப்பதுபோல, இந்தப் பாடல்களுக்குள்ளே உருவக தத்துவம் ஒன்று ஒப்பற்ற விலாசத்தோடு இயங்குகிறது.

நமது பாரத நாட்டின் புண்ணியத்தையும், சிறப்பையும் ஆனந்தக் களிப்போடு பாடுகிற பாரதியார்,

2

"யாகத்திலே தவ வேகத்திலே தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்திகொண்டார் தம்
அருளினிலே உயர்நாடு-இந்தப்
பாருக்குள்ளே நல்ல நாடு-எங்கள்
பாரத நாடு!"

என்று விம்முகிறார்.

"ஆகமாகிய இந்த மனித உடம்பிலே தெய்வ பக்தி கொண்டார் யார்? அவர்தம் அருள் எது?" என்ற கேள்விகளுக்கு விடையே சித்தரும், சித்தர்களின் பாடல்களும்.

ஆகமாகிய இந்த மனித உடம்பிலே தெய்வ பக்திகொண்டு, இதனுள் அருட் சக்தியை வளர்த்து, ஆன்ம பரிணாமத்தில் மக்களிடையே வானவர்களாகவும், மனித தெய்வங்களாகவும், உலவி அருள் வாழ்வு வாழ்ந்து அருளை வழங்கி வருகிற பெரியோர்களே, மகான்களே, சித்தர்கள். பாரத நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வனங்களிலே தவம் செய்து, ஆன்ம நேயம் கூடி, அரிய சமாதி நிலையிலே இருந்து, எல்லையற்ற பரம்பொருளின் பேரின்ப அமுதை உண்டு அமரர்களாக வெளிவந்து, மக்களையெல்லாம் தெய்வ நெறியிலே வழிப் படுத்தி ஆண்டு அருளியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள். இமயமலையிலும் பொதிகை மலையிலும் இன்றைக்கும் அந்த மரபு ஒளி வீசிக்கொண்டிருக்கிறது! அஃது அணையாத தீபம், நந்தா விளக்கு. புயலும், மழையும், வெயிலும், பனியும் அந்த ஒளியைத் தொடுவ தில்லை. அது, காலனைக்காலால் உதைத்த கடவுள் தன்மையோடு நிலையாகி ஒளிவீசி நமது சமுதாயத்தைப் பாதுகாத்து வருகிறது. அந்த ஒளிவிளக்கே சித்தர்களின் இலக்கியமாகும். அதனுடைய சுடரே இருள் சூழ்ந்த உலகில் என்றென்றும் ஒளிபரப்பி வருகிறது.

சித்தர்கள் என்ற சொல்லுக்குச் சித்தி கை கூடினவர்கள் என்று பொருள். இந்தச் சித்தி அவர்களுக்கு எப்படிக் கிட்டியது? திருமூலர் கூறுகிறார்?

'யோக சமாதியின் உள்ளே அகலிடம்
யோக சமாதியின் உள்ளே உளஒளி
யோக சமாதியின் உள்ளே உளசக்தி
யோகசமாதி உகந்தவர் சித்தரே!'

யோக சமாதியை உகந்தவர் யாரோ, அவரே சித்தர் என்று வரையறை செய்கிறார் திருமூலர்.

**இதிகாசங்களில் ஆதியோடு அந்தம் தர்மத்தின் ஆக்கமும், அதர்மத்தின் அழிவும் முழங்கு வதைக் கேட்கலாம். அதனால் இந்துமதமாகிய பெரும் மாளிகையில் அடிக்கல்லாக வேதமும், அதன் சுற்றுப் பிராகரமாக ஸ்மிருதியும், அதன் தூண்களாக இதிகாசங்களும் புராணங்களும் விளங்குகின்றன.**

**-சுவாமி பரமேசுவரானந்தா.**

***மனஉறுதி, வலிமை என்பன பிறரை ஆளுவதற்கல்ல. நம்மை நாமே ஆள்வதற்காக!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே "ஆகத்திலே தெய்வபக்தி கொண்டார்" என்ற பாடலின் பொருளுமாகும்.

சித்தர்களுடைய அடிப்படை இதுதான், திரு மூலர் சொல்லுகிற யோக சமாதி இந்த உடம்பிலே தெய்வ சத்தியைக் கூடுகிற தவயோகம் இருக் கிறதே, அந்த யோகமே சித்தர்களுடைய தவ நெறியாகும்!

3

மனித உடம்பு நிலையற்றது, மனித வாழ்வு பயனற்றது என்றெல்லாம் கூறுகிற வெறுப்பு நிலை ஒரு புறம் இருக்க,

'மனித்தப் பிறவியும் வேண்டுவ தே இந்த மாநிலத்தே'

என்கிற நிலையே வேறு!

இந்த மனித உடம்பும் இந்த மனித வாழ்வுமே தெய்வத்தைக் காணுவதற்குரிய ஒப்பற்ற சாதனங் கள் என்று தெளிகிற நிலை இருக்கிறதே, அதுவே சித்திகளுக்கெல்லாம் அடிப்படையான சித்தி. திருமந்திர மாமுனிவரான திருமூலர் பாடுகிறார்:-

**உடம்பினை முன்னம் இழுக்கென்(று) இருந்தேன்**<br>**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**<br>**உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்(று)**<br>**உடம்பினை யானிருந்(து) ஓம்புகின்றேனே!'**

இந்த உடம்பு மிகப் பெரிய சாதனம். இதனுள் புருடோத்தமனாகிய பரமாத்மா, இறை வன், கோயில் கொண்டிருக்கிறான் என்று கண்ணா ரக்கண்டு, இந்த உடற் கோயிலைப் பக்குவமாகப் பாதுகாத்து, இறைவனுக்குரிய இடமாகப் பரிசுத்த நிலையிலே பேணி, யோக சமாதி உகந்தவர் யாரோ அவரே மெய்யான சித்தர்கள். அவர்கள் பெற்ற தெய்வ ஆற்றல்கள் வெறும் செப்பிடு வித்தைகள் அல்ல. அந்தத் தெய்வ ஆற்றல்கள் உலகையே உய்விக்கிற பேரின்ப ஆற்றல்கள் ஆம்.

**'உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே'**

என்று பாடுகிறார் அல்லவா? இந்தக் காரணத்தினா லேதான், உடம்பின் நுட்பங்களையும், இயல்பு களையும், மனத்தின் தன்மைகளையும், ஆதாரங் களையும், ஆராய்கிற காய சித்தி உபாயங்களும், வைத்திய முறைகளும், மனத்தத்துவ இயலாகிய பெரிய விஞ்ஞான அறிவும், சித்தர் இலக்கியத்தின் உப அங்கமாக எழுந்தன. உடல் தத்துவத்தோடு இணைந்து, மனத்தத்துவமும், விஞ்ஞான தத்து வமும், மெய்ஞ்ஞான தத்துவமும் பாது காக்கப் பட்டன. எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருப்பது சரீர யோக சித்தி.

இந்த உடம்புளே தெய்வ தரிசனம் பெற்று, இறை ஆற்றலை இந்த உடம்புளே வளர்த்து, உலகிற்குத் தங்கள் யோக சாதனையினால் ஒளியூட்டி மனித சமுதாயத்தைப் பாதுகாப்பதே சித்தர்களின் குறிக்கோள்.

**'யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'**

என்பதே சித்தர் இலக்கியத்தின் ஆதார சுருதி. உடம்பின் மூலம் இறைவனை வழிபடுகிற ஞான நெறிக்கு நம்மை அழைத்துச் செல்வதற்கு ஆரம்பப் பயிற்சி தருவதற்காகவே நம்முடைய முன்னோர்கள், நம் நாட்டு ஞானிகள், நாடெங்கும் கோயில்களை நிறுவி அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்பத் தெய்வத்தை வழிபடும் முறைகளையும் வகுத்துத் தந்தார்கள். நம்முடைய தமிழ் நாட்டில் எழுந்துள்ள பெரிய பெரிய கோயில்கள் எல்லாம் மகான்களும் சித்தர்களும் நமக்காக நிறுவித்தந்த ஆன்ம விடுதிகள், தெய்வ நிலையங்கள். விநோ தக் காட்சிகளைப் பார்க்கச் செல்கிற கூடங்கள் அல்ல அவை. கலையழகும் தெய்வ சாந்நித்தி

***பிரச்சனைகளால் நிலை குலையாதீர்கள். அவை, நீங்கள் சித்திபெய்த வேண்டிய பரீட்சைகள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமும் இரண்டறக் கலந்த நிலையங்கள் அவை. கல்யானையிலே யானையைப் பார்த்தால், கல் மறைந்துவிடுகிறது; கல்லைப் பார்த்தால் யானை மறைந்துவிடுகிறது! உள்ளத்துக்குள்ளே இருக்கிற யானைதான் கல்லிலே யானையாகப் பிறப்பெடுக்கிறது. உள்ளத்தில் யானை இல்லை என்றால், கல்லிலும் இல்லைதானே! இது போலவே நம்முடைய கோவில்களின் அமைப்பிலும் நுட்பமான பத்தி தத்துவத்தைப் பொதிந்து வைத்துள்ளார்கள் நம் முன்னோர்களாகிய மகான்கள்!

வெளிச்சடங்குகளையும், வெளிச் செயல்களையும் உதறிப் பேசுகிற பேச்சானது, சித்தனுடைய ஆன்ம பக்குவத்திலிருந்து தெறித்து வருகிற ஞானப்பொறி; ஊருக்குப் போய்ச் சேர வேண்டியவன், கைகாட்டி மரத்தையே பார்த்துக் கொண்டு அந்த இடத்திலேயே நின்று விடக் கூடாதே என்ற பரிவிலும் கவலையிலும் எழுந்த எச்சரிக்கைப் பேச்சு அது. அவநம்பிக்கையினாலோ அல்லது அலட்சியத்தினாலோ, எழுந்த வார்த்தைகள் அல்ல அவை. போலித்தனத்தைச் சீறுகிற சீற்றத்துக்கும், உண்மையை வெறுத்துப் பேசுகிற பேச்சுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அப்படியானால் தான் சித்தர்களுடைய பாடலின் உட்பொருள் நமக்குத் துலங்கும்.

ஆம்; நம்முடைய நாட்டுச் சித்தர்கள எல்லாரும் ஆழ்ந்த தெய்வபக்தி நிரம்பியவர்கள். தெய்வ வெறி நிரம்பிய தெய்வமாக் காதலர்கள் அவர்கள். அவர்கள் பொது மக்களுக்காகத் தெய்வ சாந்நித்தியத்தைப் புறவடிவிலே காட்டி இயங்கச் செய்த வெளி அமைப்புக்களே நம் நாட்டுக் கோயில்கள். இவை அனைத்தும் சீராக ஓங்கித் தவறாது வளர்ந்தால்தான் சமுதாயத்தின் ஆன்மா செம்மைப்படும் என்ற இரகசியத்தை உணர்ந்த சித்தர்கள், இந்தக் கோயில்களில் தங்கள் சித்திகளையும் காப்பாக அமைத்து, இவற்றின் நெறி முறைகளையும் அருவத்திலே நின்று கண் காணித்து வருகிறார்கள். இவை தவறக் கூடாது என்பதற்குத் தங்கள் இலக்கியத்திலும் பலமான எச்சரிக்கைகளைப் பாடிவைத்திருக்கிறார் கள். கோவில்களில் பூசனை முறைகள் தவறாமல் நடத்தவேண்டும் என்பதில் திருமூலர் போன்ற மகான்களுக்கு அளவில்லாத கவலையும் ஆர்வமும் இருந்து வந்துள்ளன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஆம்; நமது உடம்புளே ஆன்மலிங்கம் இருக்கிறது என்றால், மகாலிங்கம் கோயிலில் இருக்கிறது. நாதலிங்கமாகிய மகான்களினுடைய பாடல்களிலும் அதுவே காட்சி தருகிறது. இந்த வழிபாடு நம்மை என்றென்றும் வழி நடத்துமாக!

நன்றி- திருவிடைமருதூர்
கும்பாபிஷேக மலர்

---

பைரவர், அனுமான், காளி போன்ற உக்கிரமமான தோற்றம் கொண்ட உருவங்கள் நமது மனத்தில் வீர உணர்வைத் தோற்றுவிக்கின்றன. சரஸ்வதி, லட்சுமி போன்றவை கலை உணர்வைத் தூண்டி விடுகின்றன. இராமர், கிருஷ்ணர் போன்ற உருவங்கள் மனதுக்கு மென்மையான உணர்வைத் தோற்றுவிக்கின்றன. காமாட்சி, பராசக்தி போன்ற வடிவங்கள் தாய்மை உணர்வுக்கு மேன்மை தருகின்றன. இப்படி வாழ்க்கையில் நாம் உணரும் உணர்ச்சிகளை ஒட்டியே இந்த விக்கிரங்களின் வடிவங்களும் அமைந்தன. வாழ்வு இயலை ஒட்டி அமைந்ததே நமது இந்துமதம்.

- ஸ்ரீ சுவாமி மகாராஜ்

---

***இன்று நீங்கள் சொல்லும் பொய், நாளை இன்னொரு பொய்யைக் கூற வைக்கும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்மமும் மறுபிறப்பும்

கன்மம் என்பது நாம் செய்யும் நல்வினை, தீவினை ஆகிய இரண்டையும் அவற்றின் பயன் களையும் குறித்து நிற்கும்.

ஒருவர்க்குத் துன்பம் விளைவிக்குஞ் செயல் களைச் செய்தால் அவை தீவினை எனப்படும்; இன்பம் விளைவிக்குஞ் செயல்களைச் செய்தால் அவை நல்வினை எனப்படும். நல்வினை தீவினைப்பயன்கள் புண்ணிய, பாவங்களாகச் சூக்குமநிலையில் நின்று பிறவிதோறும் வந்து இன்ப, துன்பங்களை ஊட்டும். புண்ணிய பாவங் களாக வினைப்பயன்கள் கட்டுப்பட்டுக் கிடக்கும் போது "சஞ்சிதம்" எனப்பெயர்பெறும்; எடுத்த பிறவியில் அவற்றிற் சில பயனுக்கு வரும். அப்பொழுது அவை "பிராத்தம்" எனப்பெறும்; புதிதாகச் செய்யப்படும் வினைகள் "ஆகாமியம்" எனப்பெயர் பெறும்.

> மனிதன் மனிதனாக வாழ்ந்தால் எப்படியோ நல்ல கர்மங்களின் மூலம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். இம்மைக்குத் தேவையான வற்றைக் கவனிக்கும் போது, மறுமைக்கு தேவையானவற்றையும் சேர்த்துக் கவனித்தால் மனித ஜென்மம் அடைந்ததன் பயனைப் பெற்றவர்களாவோம். வெறும் இகபர சௌக்கியங் களைப்பற்றி மட்டுமே கவலைப்பட்டுத் தேடிக்கொண்டிருந்தால், பணக்காரர் வீட்டு நாயைப் போன்ற வாழ்க்கைதான் கிடைக்கும். அந்தப் பணமும் வசதியும் போய்விட்டால் ஒன்றுக்கும் லாயக்கில்லாதவர்களாகி விடுவோம்.
>
> மாதா ஆனந்தமயி

கடவுள் ஒருவர் உண்டென்றால்- அவரே இவ்வுலகைப் படைத்து இயக்குகிறார் என்றால்- உயிர்களாகிய - நமக்கு ஏன் இன்ப, துன்பங்கள் மாறிமாறி வருகின்றன? கடவுள் வேண்டுதல், வேண்டாமை இல்லாதவர். எல்லார்க்கும் வேறுபாடு காட்டாமல் நன்மை செய்ய வேண்டுவது அவர் கடமை. அங்ஙனம் இருக்க ஓர் உயிர்க்குத் தீராத நோயையும், மற்றோர் உயிர்க்குப் பரிபூரண ஆரோக்கியத்தையும் அவர் உண்டாக்குவது நியாயமாகுமா? சோதனைக்காக உண்டாக்கு கிறார் என்றால் ஓர் உயிர்க்குக் கடுமையான சோதனையையும் மற்றோர் உயிருக்கு எளிதான சோதனையையும் செய்வது பொருத்தமாகுமா? உயிர்கள் அநாதியே ஆணவமலப் பிடிப்புக்குள்ளா கியிருக்கின்றன. இறைவன் உயிர்களைப் படைக் கவில்லையாதலால், அவை அநாதியே மலபந்தத் திற்குள்ளாவதற்கு அவன் பொறுப்பாளியாக மாட்டான். உயிர்கள் கடவுளைப் போல அநாதியே உள்ளவை; அவைக்குள்ள எளிய இயல்பால் அநாதியே மல பந்தத்திற்குள்ளா கின்றன; அவை அறிவுடையவை; படிமுறையே பயிற்சி பெறுதல் அவற்றின் இயல்பு. உடனே இறைவன் ஆணவமலபந்தத் தினின்றும் அவற்றை விடுதலை செய்தால் அவற்றின் அறிவில் தெளிவு தோன்றாது. இதனாலேயே அவற்றின் விருப்பு, வெறுப்பிற்கேற்ப நல்வினை, தீவினைகளைச் செய்வதற்கு இறை வன் துணை நிற்கிறான். அவை ஆற்றும் வினைக்கேற்ப இன்ப, துன்பப் பயன்களை ஊட்டுவதன் மூலம் அவற்றைத் திருந்துமாறு செய்து ஆணவமலபந்தத்தினின்றும் விடுவித்து

***உலகில் சில மனிதர்களின் பேராசையால், பல மனிதர்கள் பிச்சை எடுக்கிறார்கள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திப் பேரின்பத்தை வழங்குகிறான். அந்தந்த உயிர்களின் வினைக்கேற்ப இன்ப, துன்பங்களை இறைவன் வழங்குவதால் அவனின் நடுநிலைக் கோ, வேண்டுதல், வேண்டாமை இல்லாத பண்புக் கோ எவ்விதப் பாதிப்புமில்லை; உயிர்கள் திருந் துவதற்கே இறைவன் வினைப் பயன்களை ஊட்டுவதால் அவன் கருணைக்கும் இழுக்கில்லை. ஒருவர் துயர் உறுவதற்கும் மற்றொருவர் இன் புறுதற்கும் அவரவர் செய்துள்ள வினையே காரணம் என்பது இதனால் புலனாகும்.

பிறக்கும்பொழுதே கண்தெரியாமற் போகிற குழந்தைகளும் உண்டு, கால், கை ஊனமாகப் பிறப்பவையும் உண்டு. இதற்குக் காரணம் யாது? வினையே காரணம் என்றால், குழந்தை பிறக்கும்பொழுது எந்த வினையையும் செய்ய முடியாதே என வினாவலாம். இதனைச் சிந்திக்கும் பொழுது தான், முற்பிறப்பில் அக்குழந்தை செய்துள்ள வினையின் காரணமாகவே அஃது இப்பிறப்பில், துயர் எய்துகிறதென்பது புலனா கிறது. முற்பிறப்பு உண்டென்றால், மறுபிறப்பும் உண்டென்பது தானே பெறப்படும். எனவே வினையையும் வினைப்பயன்களையும் ஒப்புக் கொண்டே ஆகவேண்டும். முற்பிறப்பு, மறுபிறப்பு ஆகியவற்றை ஒப்புக்கொள்ளுகிற சமயங்கள் முற்பிறப்பு, மறுபிறப்பு ஆகியவற்றை ஒப்புக் கொள்ளாத சமயத்தினரை நோக்கி, "ஆண்டவன் ஏன் ஒரு குழந்தையைப் பிறக்கும்பொழுதே ஊனமாக்கவேண்டும்?" என வினாவினால் "அஃது இறைவனின் சோதனை" என்கிறார்கள். அந்தக் குழந்தைக்கு மட்டும் ஏன் இறைவன் இவ்வளவு கடுமையான சோதனையைச் செய்யவேண்டும்? என வினவினால் அவர்களால் பதில் இறுக்க இயலவில்லை. "ஆண்டவன் ஒருவன் உண்டு; அவனே உலகை இயக்குகிறான்" என ஒப்புக் கொள்ளுகிற சமயங்கள் வினையையும் வினைப் பயன்களையும் முற்பிறப்பு, மறுபிறப்பு ஆகியவற் றையும் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். வேறுவகையாகச் சொல்வன எல்லாம் இறைவன் இலக்கணத்திற்குப் புறம்பாகவே முடியும்.

கடவுளைப்பற்றிக் கவலைப்படாத சமண, பௌத்த சமயங்களும் கன்மத்தையும் முற்பிறப்பு, மறுபிறப்பு ஆகியவற்றையும் ஒப்புக்கொள்கின்றன. அச்சமயங்கள் அறவாழ்க்கையை அடிப்படை யாகக் கொண்டவையாகும். "அறம் முறை பிறழாது" என்பதில் அவை ஆழ்ந்த நம்பிக்கை உடையன. நல்லோரும் துயருறுதற்கும், தீயோரும் இன்புறுதற்கும் காரணம் யாது? என அவை ஆராய்ந்து, "முற்பிறவியிற் செய்துள்ள தீவினை காரணமாகவே நல்லோரும் இப்பிறப்பில் துயர் உறவேண்டி இருக்கிறது" எனக்கூறுகின்றன. இவ்வாறு அவை சொல்லாவிட்டால் அறம் முறை பிறழ்ந்ததாக எண்ணவரும். இதனாலேயே அவை வினையையும் வினைப்பயன்களையும் முற்பிறவி, மறுபிறவியையும் ஏற்றுக்கொள் கின்றன. சைவமும் இக்கருத்தை ஒப்புக்கொள் கிறது. ஆனால், "அறம் சடமாதலால் தானே செயற்படாது. இறைவனே அறத்தை அடிப்படையா கக் கொண்டு வினைப்பயன்களை ஊட்டுகிறான்" எனக் கூறுகிறது.

கடவுளே இல்லை எனக்கூறும் சமயம், சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகவே நல்லோர் துயருறுதலும், தீயோர் இன்புறுதலும் நிகழ்வதால் இதற்கு வினைப்பயனை ஆதாரமாகக் கூறுவது அறியாமை என்கிறது. உலகியல் நிகழ்ச்சிகள் இயற்கையின் உந்துதலால் தாமாகவே நடை பெறுகின்றன என்பது அதன் கொள்கையாகும். உலகியல் நிகழ்ச்சிகள் அனைத்தையும் தொகுத் துப் பார்த் தால் அவை தோற்றம், அறிவு ஆகிய

***எதிரிகளை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள் - உங்களுக்கு எதிரிகளே இருக்கமாட்டார்கள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டினுள் அடங்கி நிற்கும். இயற்கையினுள் தோற்றுவிக்கும் சக்தியும், அழிப்பிக்கும் சக்தியும் இயல்பாகவே அமைந்து கிடக்கின்றன என்று வைத்துக் கொள் வோம். தோற்றுவிக்கும் சக்தி கூடுதலான வலிமை உடையதாக இருந்தால் அழிப்பிக்கும் சக்தியைச் செயற்படவிடாது; அழிப்பிக்கும் சக்தி கூடுதலான வலிமை உடையதாக இருந்தால் தோற்றுவிக்குஞ் சக்தியைச் செயற்படவிடாது; இரண்டும் சம வலிமையுடன் இருந்தால் இரண்டுமே நடை பெறமாட்டா. ஆனால் உலகில் இரண்டும் நடைபெறக் காண்கிறோம். இயற்கை அறிவற்ற தாதலால் ஒரு சக்தி செயற்படும்போது மற்றொரு சக்தியை அடக்கிவைத்துக் கொள்ள அதற்குத் தெரியாது. அறிவுடைய ஒரு பொருளுக்கே இயற்கையினுள் கிடக்கும். ஒருசக்தி செயற்படும் பொது மற்றொரு சக்தியைத் தடுத்து வைக்கத் தெரியும். இதனால், அறிவுடைய ஒரு பொருளின் துணை இன்றி உலகில் தோற்றம், அழிவு ஆகிய இரண்டும் நடைபெறமாட்டா என்பது தெளிவு, இந்த அறிவுடைய பொருளையே "கடவுள்" எனச்சமயங்கள் பெயரிட்டு அழைக் கின்றன. அறிவுடைய ஒரு பொருள் உலகை இயக்குகிறதென்றால் அந்த இயக்கம் காரண, காரியங்களோடுதான் நிகழவேண்டும்; குருட்டுத் தனமான சந்தர்ப்பம், சூழ்நிலைகள் காரணமாக நடைபெறுகிறதென்பது பொருத்தமா காது. எனவே எவ்வாற்றாலும் கடவுள் ஒருவர் உண்டு என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்; கடவுளை ஒப்புக்கொண்டால் வினையையும் வினைப்பயனையும் முற்பிறவி, மறுபிறவியையும் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்; இல்லையேற் கடவுள் இலக்கணத்திற்கு முரண்வரும்.

"இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? எனத்தாயுமானார் கலங்குகிறார். மனிதன் கீழ்ப் பிறவிக்குஞ் செல்லலாம்; விலங்கு மனிதனாகப் பிறக்கலாம். "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி" என மணிவாசகர் கூறுவதால், "புல்முதல் தேவர் ஈறாக ஆன்மாக்கள் பல்வேறு பிறவிகள் எடுக்கும் என்பது புலனாகும். பிறவிகள் மேன் மேலும் வந்து கொண்டே இருக்கும். இருவினை ஒப்பு அதாவது விருப்பு, வெறுப்பற்ற நிலை நமக்கு உண்டாகிவிட்டால் வினையின் பிடிப்பு அறும், வினைப்பிடிப்பு அற்றதும் இறைவன் குருவடிவாக வந்து நமக்கு ஞானத்தை உணர்த்து வான்; ஞானம் பெற்றதும் திருவருள் துணையால் இறைவன் திருவடியைப் பற்றிப் பிறவா நிலையை எய்துவோம். "மற்றுப்பற்றெனக் கின்றி நின்திருப் பாதமே மனம் பாவித்தேன், பெற்றலும் பிறந் தேன் இனிப்பிற வாததன்மைவந் தெய்தினேன்" எனச் சுந்தரர் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்'

ஆத்மாவை ஒளிபெறச் செய்வதே மௌனம் என்று சொல்லப்படும். அது வாயை மூடிக் கொண்டிருப் பது மட்டும் அல்ல. மௌனம் என்பது தியானத்தில் மிக உயர்ந்ததாகும். அதனால் மௌன விரதம் இருப்பவர்கள் கண்ணை விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தாலும். பார்வையை உள்முகமாகத் திருப்பிக் கொள்கிறார்கள். அவர்கள் பேசாமல் இருப்பது மட்டும் அமைதி அல்ல. தன்னைச் சுற்றிலும் அமைதியைத் தேடிக்கொண்டு. நமது மனத்துக்குள்ளும் அமைதியை அவர்கள் நாடுகிறார்கள். அதனால் ஆசாரிய புருஷர்கள் மௌனவிரதம் அனுஷ்டிப்பதை மிக முக்கியமாக ஏற்கிறார்கள். - ஸ்ரீ சத்யசாயிபாபா

***பெற்றோரின் நடத்தையே - குழந்தைகளுக்கான கல்வி!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

## மட்டக்களப்புக் கூத்துக்கள் பற்றிய கருத்தரங்கு

திணைக்களத்தின் அனுசரணையோடு, மண்முனை வடக்குப் பிரதேசச் செயலகம் ஒழுங்கு செய்திருந்த **மட்டக்களப்புக் கூத்துக் களின் அரங்கியற் பரிமாணங்கள்** எனும் ஆய்வுக் கருத்தரங்கு கடந்த டிசம்பர் 29, 30, 31 ஆம் திகதிகளில் கல்லடி, சுவாமி விபுலாநந்த இசை நடனக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேசச் செயலாளர் திரு செ. புண்ணியமூர்த்தி அவர்கள் ஏற்பாடு செய்திருந்த இம் மூன்றுநாட் கருத்தரங் கினை, கிழக்குப் பல்கலைக்கழக கலைத்துறைப் பீடாதிபதி கலாநிதி. சி. மௌனகுரு அவர்கள் நெறிப்படுத்தினார். மட்டக்களப்பு அரச அதிபர் திரு.அ.கி. பத்மநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மூன்றுதினங்கள் நடைபெற்ற வெவ்வேறு அமர்வுகளில், திருவாளர்கள். கே. கிருஷ்ண பிள்ளை (தேனூரான்), இரா. நாகலிங்கம் (அன்புமணி), சுதாகரன், திமிலை மகாலிங்கம், க. சீவரெத்தினம், செல்வி. வனிதா அரசரத்தினம், அ. அன்பழகன், திரு சீ. தெய்வநாயகம் (உதவிப்பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள திணைக்களம்) , வித்துவான். சா. இ. கமலநாதன், திரு. செயசங்கர் (விரிவுரையாளர். நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்), திரு.பாலசுகுமார் (விரிவுரையாளர், நுண்கலைத் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்) செல்வி க. தங்கேஸ்வரி (கலாசார உத்தியாகத்தர், மட்டக் களப்பு), க. தியாகராஜா (செயலாளர், கல்வி, கலாசார அமைச்சு, வடகிழக்கு மாகாணம்), வெ. தவராசா, ஸ்ரீ கணேசன் (விரிவுரையாளர், இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி, வவுனியா) ஆகியோர் கலந்துகொண்டு ஆய்வுரைகளும், சிறப்புரைகளும் வழங்கினர். பேராசிரியர் கா.சிவத் தம்பி அவர்களது ஆய்வுரையை கலாநிதி. சி. மௌனகுரு அவர்கள் சமர்ப்பித்தார்.

31ஆம் திகதி பிற்பகல், கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் நிகழ்ச்சிகளின் தொகுப்புரை வழங்கினார். மண்முனை பிரதேச செயலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. நிர்மலா ஜெயராஜா அவர்களின் நன்றியுரையுடன் கருத்தரங்கு நிறைவு பெற்றது.

இக்கருத்தரங்கிற் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் விபரம் வருமாறு:-

01. **தென்மோடிக்கூத்து அண்ணாவியார்- திமிலை மகாலிங்கம்**
02. மட்டக்களப்புக் கூத்துக்களில் நடிப்பு கூத்து நடிகர் திரு. நல்லலிங்கம் - திமிலை மகாலிங்கம்.
03. மட்டக்களப்புக் கூத்து அமைப்பும், அரங்கியலும்-சி. ஜெயசங்கர்
04. திரு. க. செல்லையா அண்ணாவியாரும் வடமோடிக்கூத்தும் அறிமுகமும்-எஸ். சீவரட்ணம்.

---

***ஒரு வாய்ப்பை இழந்துவிட்டால் கண்ணீர் சொரிவதில்லை. இறைவன் எண்ணிறந்த வாய்ப்புகளை நல்கியிருக்கிறான்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. கூத்து ஒப்பனை ஒப்பனையாளர் திரு. க. கனகையா -அ. வனிதா

06. நாட்டுக்கூத்தின் நவீனவாக்கமும், 1970-1990 வரை மட்டக்களப்பு கூத்துக்கள் நவீன நாடகத்தில் இடம் பெற்றமையும்.
-வெ. தவராஜா

07. மட்டக்களப்புக் கூத்துக்களை ஆராய்வதிலுள்ள சிக்கல்கள். - கலாநிதி.சி. மௌன குரு

## சமய தீட்சை

1996 பெப்ரவரி 4ந் திகதி தைப்பூச தினத்தன்று கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீலஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் அவர்கள் புத்தளம் பகுதி சைவ மக்கள் பலருக்கு சமய தீட்சை அளித்தார்.

அதில் புத்தளம் இந்து த.த.வி. அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழையமாணவர், தில்லையடி அறநெறிப் பாடசாலை மாணவர்கள், புத்தளம் இந்து வாலிபர் சங்க அங்கத்தவர்கள், அயற் கிராமப் பகுதிமக்கள் முதலான நூற்றுக்கு மேற்பட்டோருக்கு தீட்சை அளிக்கப்பட்டது.

## திருப்பணி வேலைகள்

நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான திருப்பணி வேலைகள் தற்போது நடைபெற்று முடிவுறுந்தறுவாயில் உள்ளன. எதிர்வரும் மே மாதமளவில் மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் தேவஸ்தான சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

## இருபது ஆன்மீக போதனைகள்

- ஸ்ரீ சுவாமி சிவானந்தா

1. நான்கு மணிக்கு எழுந்திருங்கள், ஜபம் தியானம் செய்யுங்கள்
2. சாத்வீக ஆகாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். வயிறு நிறைய உணவு எடுத்துக்கொள்ளாதீர்கள்.
3. பத்மாசனம் அல்லது சித்தாசனத்தில் அமர்ந்து ஜபம் தியானம் செய்யுங்கள்
4. தியானத்திற்கென தனி அறையைப் பயன்படுத்துங்கள்.
5. உங்கள்வருவாயில் பத்தில் ஒரு பங்கினை அல்லது ரூபாய்க்கு பத்துப் பைசாக்களை தர்மம் செய்யுங்கள்.
6. தினசரி பகவத்கீதையில் ஒரு அத்தியாயம் படியுங்கள்.
7. தனியாகப் படுத்துத் தூங்குங்கள்
8. புகைப்பிடித்தல், போதைதரும் பானம், உயர்தர உணவு இவைகளை விட்டுவிடுங்கள்,
9. ஏகாதசி தினம் உபவாசம் இருங்கள் அல்லது பால் பழங்களை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள்.
10. தினசரி 2 மணி நேரம் மௌனத்தையும், சாப்பிடும் பொழுது மௌனத்தையும் கடைப்பிடியுங்கள்.
11. எந்நிலையிலும் உண்மையே பேசுங்கள். கொஞ்சமாக இனிமையாகப் பேசுங்கள்.
12. தேவைகளைக் குறைத்துக்கொள்ளுங்கள். திருப்தியாக சந்தோசமாக வாழ்க்கையை நடத்துங்கள்.
13. மற்றவர்களுடைய உணர்ச்சிகளைப் புண்படுத்தாதீர்கள். எல்லோரிடமும் அன்பாக இருங்கள்.
14. நீங்கள் செய்த தவறுகளை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.
15. வேலைக்காரர்களையே நம்பி இருக்காதீர்கள். சுய தேவையை நீங்களே பூர்த்திசெய்துகொள்ளுங்கள்.
16. படுக்கையைவிட்டு எழுந்தவுடனும் படுக்கைக்குச் செல்லுமுன்னும் கடவுளைத் தியானியுங்கள்!
17. உங்கள் கழுத்திலோ அல்லது சட்டைப்பையிலோ ஜபமாலை ஒன்றை வைத்திருங்கள்.
18. எளிமையான வாழ்க்கையும் உயர்ந்த எண்ணமும் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கருதவேண்டும்.
19. சாது, சந்நியாசி ஏழை எளியோர்களுக்கு உதவ வேண்டும்.
20. கடமையை நிறைவேற்றுவதில் ஒருபொழுதும் பின் வாங்காதீர்கள். தினசரி ஆன்மீக நாட்குறிப்பினை எழுதி வாருங்கள்.

***நாம் தவறான சொற்களைப் பயன்படுத்துகிறோம் என்றால், நமக்கு சரியான சொற்கள் தெரியாது என்றே பொருள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும் கலைகளும்

கலாநிதி. க. ப. அறவாணன்
புதுவைப் பல்கலைக்கழகம் - புதுச்சேரி

பண்டைச் சமயத் தோற்றத்திற்கு மானுட வியல் அறிஞர் பல்வேறு காரணங்களைக் காட்டுகின்றனர். அவற்றுள் ஆவி உலகக் கோட் பாடு, இயற்கைக் கோட்பாடு, முன்னோர் வழி பாட்டுக் கோட்பாடு என்பன சிறப்பாகச் சுட்டத் தக்கவை. தமிழர் தம் பண்டைச் சமயக் கூறுகளுள், ஆவி வழிபாட்டுக் கூறும், இயற்கை வழிபாட்டுக் கூறும், முன்னோர் வழிபாட்டுக் கூறும் கலந்து இயைந்தே உள்ளன. சமய வாழ்வின் தொடக்க நிலை பற்றி ஆராய்ந்து The Elementary forms of religious Life 1992" எனும் தலைப்பில் நூல் எழுதிய பிரெஞ்சு சமூகவியல் அறிஞர் எமில் துர்க்கேம், குலக்குறியே, அதனைச் சார்ந்த நம்பிக்கையே சமயமாக வளர்ச்சி கொண்டது என்று விளக்குவார். ஆஸ்திரேலி யாவில் வாழும் அருண்டா பழங்குடிமக்களை ஆதாரமாகக் கொண்டு தம் கொள்கையை அவர் உருவாக்கி விளக்கினார். மக்கள் ஒரே மாதிரியா கப்போய்க் கொண்டிருக்கும் அன்றாட வாழ்க்கை யில் சலிப்பு அடைகிறார்கள் அந்தச் சலிப்பில் இருந்து விடுதலை பெற எல்லாரும் ஒன்று கூடி ஆட்டம், பாட்டம் நிகழ்த்துகிறார்கள். இந்த ஆட்டபாட்டம் ஆரவாரத்தோடு வெறித்தனமாக அமைகின்றது. எனவே அதில் கலந்து கொள் கிறவர்களுக்கு ஆவேசம் வந்துவிடுகிறது. கொஞ்ச நேரத்தில் வந்த ஆவேசம் அடங்க, ஆட்டம்பாட்டங் கள் நின்றுபோகின்றன.

எப்படி இந்த ஆவேசம் வருகிறது. எப்படி அது போகிறது என்று அவர்கள் எண்ணத் தொடங்கினார்கள். ஏதோ ஒரு நுட்பமான அருவ மான மறைமுகச் சக்திதான் காரணமாக இருக்க வேண்டும் என்று கருதினர். அது வெளியே இருந்து மக்கள் உடலில் புகும்போது மக்களுக்கு ஆவேசம் வந்துவிடுகிறது. விலகிப் போகும் போது ஆவேசம் விலகிப் போய்விடுகிறது. இந்தச்சக்தியை அருண்டா மக்கள் "மானா" என்று குறித்தனர். அதனைப் பூசித்து வழிபட்டனர் அருவமாக நினைத்து வழிபடுவதை விட அதனை உருவமாக்கி வழிபட எண்ணினர். அந்த உருவத் தைப் புனிதமாகக் கருதி வழிபட்டனர். அதனை ஒட்டியே பூசைகள், சடங்குகள் முதலானவை தோன்றின. அந்த உருவமே குலக்குறி (Totem) எனப்படும். உருவங்கள் மட்டும் அல்லாமல் தாவரங்கள், விலங்குகள், இயற்கைப் பொருள்கள் முதலானவும் சக்தியின் இருப்பிடங்களாகக் கருதப் பட்டு, புனிதப்பொருள்களாகப் போற்றப் பெற்றன.

தமிழர் ஆதி சமயக் கூறுகளிலும் இக் குலக்குறி இருந்ததை நம் பழைய வரலாறு காட்டுகிறது. கல், லிங்கம், புனித மரங்கள், நந்தி, நாகம் போன்ற விலங்குகள், பருந்து, மயில் போன்ற பறவைகள், தமிழர் வழிபாட்டின் வழிபாட்டுக் கூறுகளாக இருப்பது சுட்டத்தக்கது.

தமிழ் வழிபாட்டில் முன்னோர் வழிபாடும் இடம்பெற்று இருந்தமையை இறைவன், ஆண்ட

---

*பிறரை கௌரவிப்பதை எந்நிலையிலும் கைவிடாதீர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் என வரும் கடவுளுக்கும், அரசனுக்கும் பொதுவான சொற்கள், கடவுளும், அரசனும் இருந்த இடம் கோயில் என வழங்கப்பெறும் வழக்காறு, அரசனைக் கடவுளின் அவதாரமாகக் குறிக்கும் கல்வெட்டுகள், மறைந்த பெற்றோரைத் தென்புலத்தார் என வழிபடும் வழக்கம் ஆகியன எடுத்துக் காட்டுகின்றன.

ஓவியக் கலையைப் பொறுத்தளவில் நடு கல்லில் சங்ககாலத்தில் எழுதப்பட்ட வீரனின் ஓவியங்கள் மிகப்பழங்காலத்தன. ஆனால் யாது ஒன்றும் எமக்கு இன்றுவரை கிடைக்கவில்லை. சங்க இலக்கியத்தில் ஓவியம் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அகநானூறு 5 -20, 54- 4, 96-11, நற்றினை 152 -2. பட்டினப்பாலை, மதுரை காஞ்சி, நெடுநல்வாடை போன்றவற்றில் ஓவம் ஓவியம் எனும் சொற்கள் இடம் பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தில் திரையில் எழுதப்பட்ட ஓவியங் கள் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. கதை ஓவியங்களைப்பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன (நெடுநல்வாடை 110, அகம் 211, மணிமேகலை 3. 150) ஓவிய நூல் ஒன்று இருந்ததாக அடியார்க்கு நல்லார் உரையில் குறிப்பு ஒன்று வருகிறது திருப்பரங்குன்றத்தில் கவுதம் முனிவர் தம் மனைவி அகலிகையையும், இந்திரனையும் சபித்த நிகழ்வு ஓவியமாக வரையப்பெற்றிருந்தது எனும் குறிப்பு பரிபாடலில் (19) கூறப்பட்டுள்ளது. மணிமேகலை, சிலப்பதிகாரம், பெருங்கதை, சிந்தாமணி, திவாகர நிகண்டு, கம்பஇராமாயணம் ஆகியவற்றில் ஓவியம் பற்றிய பல்வேறு குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. பல்லவர் காலத்திற்குப் பின்பு காஞ்சிபுரம், பனமலை, ஆர்மாமலை, சித்தன்ன வாசல், தஞ்சாவூர், திருமலைபுரம், நர்த்தா மலை, திரு மலை, திருப்பருத்திக் குன்றம் ஆகிய இடங்களில் கி. பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற் றாண்டு வரையிலான கால கட்டங்களில் வரையப் பட்ட ஓவியங்கள் சில ஆலயங்களிலும், வைணவ ஆலயங்களிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சிற்பக்கலை, ஓவியக்கலை ஆகியவற்றுக்கு அடுத்ததாக அல்லது இணையாகக் கருதத்தக்க தோற்றமும், வளர்ச்சியும், பெருமையும் உடையது இசைக் கலையாகும். தமிழர் வழிபாட்டு முறையை இசையிலிருந்து பிரிக்கமுடியாது என்பதைப் பக்தி இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. சைவ நாயன்மார்களால் தமிழ் இசை முறைப்படி தேவாரப் பாடல்கள் காலந்தோறும் இசைக்கப் பட்டன. திருநீலகண்டயாழ்ப்பாணர் முதலானோர் வரலாறு இசைக்கருவியோடு இணைந்து அமைந்தது ஆகும். பக்தி இலக்கியத்திற்கு முன்பே பரிபாடல், தமிழிசை, தாளம், பண் ஆகிய வகைதொகையோடு அமைக்கப்பட்டிருந்த தைக் காணுகிறோம். கோயில்களில் இசை வல்லார் அமர்த்தப் பெற்றிருந்ததையும், தேவாரம் ஓதப் பெற்றதையும் தஞ்சைப் பெரிய கோயில் முதலான பல கோயில் கல்வெட்டுகள் எடுத்து ரைக்கின்றன. பிற்காலத்து அருணகிரியார் தம் திருப்புகழ் முழுவதையும் பல்வேறு சிவத் தலங்களில் இசை மழையாகக் கொட்டியதை அவர்தம் வரலாறு எடுத்துரைக்கின்றது. தமிழ் இசையோடும் சைவத்தோடும் இணைந்த பலரை வரலாற்றில் இருந்து நிறைய காட்ட முடியும், தெலுங்கு மொழியின் தலையீடும் செல்வாக்கும் தமிழர் வரலாற்றில் குறுக்கிடுகின்ற வரை தமிழர்க் கே உரிய இசை சிறந்து வளர்ந்து இருந்தது. தொடக்கத்தில் மானா சக்தி ஆட்டம் பாட்டத்தில் இருந்து அறியப் பெற்றது என்ற வரலாற்றையும் தமிழ் இசை இணைப்பையும் இணைத்துக் கருதின் தமிழர் இசைப் பழைமை தெளிவாகப்

*உங்கள் வெறுப்பை உணர்த்துவதற்கு கைகளை ஒருபோதும் ஓங்காதீர்கள் !*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலப்படும்.

இசைக் கலைக்கு இணையாகச் சுட்டிக் காட்ட வேண்டியது ஆடற்கலையாகும். சிவனின் ஒரு தோற்றமான நடராச உருவம் உலகப் புகழ்பெற்ற ஒன்றாகும். இவ்வாடலவல்லான் உருவம் சைவ நாயன்மார் காலத்தில் உருக் கொண்டு, பிற்காலச் சோழர் காலத்தில் மிகப் பெரிய அளவு பரவிய ஒன்றாகும். நடராச உருவத்தின் ஆயிரக் கணக்கான வெண்கலப் படிமங்களாகும், பல்லாயிரக்கணக்கான படைப்பு உருவச் சிற்பங்களும் தமிழகக் கோயில்களில் காணப்படுகின்றன. ஆடற் கலையில் தமிழர் பெரும் வல்லுநர் என்பதைச் சிலப்பதிகாரமும், குறிப்பாக அரங்கேற்று காதையும் குன்றக் குரவையும், ஆய்ச்சியர் குரவையும் எடுத்துக்காட்டும் மாதவி ஆடலிலும், யாழ் மீட்டுவதிலும், இசை பாடுவதிலும் பெரும் ஆற்றல் பெற்றிருந்தாள் என்று சிலப்பதிகாரம் எடுத்துக் காட்டுகின்றது ஆடல், இசை தொடர்பான இலக்கண நூல்களைத் தமிழர் பெற்றிருந்தனர் என்று அடியார்க்கு நல்லார் உரை தெளிவுபடுத்துகிறது. சோழர் காலம் தொடங்கி, கோயில்களில் ஆடல் வல்ல மகளிர் அமர்த்தப் பெற்றிருந்ததைக் கல்வெட்டுச் செய்திகள் வலியுறுத்துகின்றன. கூத்து என்பதே ஆடலையும், நாடகத்தையும் குறிக்கும் சொல்லாகத் தமிழரிடையே புழங்கியது. வேத்தியல் கூத்து, பொதுவியல்கூத்து என்ற வழக்காறுகளும் இருந்தன. நாடகத்தமிழ் ஒரு காலத்தில் பாட்டும் நடனமுமாகவே இருந்தது.

தமிழகத்தில் கி பி 6.7ஆம் நூற்றாண்டு முதல் கட்டப்பட்ட கோயில்கள் கட்டடக்கலைக்குப் பெரும் சான்றாக விளங்குகின்றது. தமிழர் கோயில் கட்டும் கலை நூற்றாண்டு தோறும் தொடர்ந்து இருந்து வந்ததை உலகு எங்கும் பரவியுள்ள கோயில்கள் எடுத்துரைக்கின்றன. பிற்காலச் சோழர்காலத்தில் தாய்லாந்து முதலான தென் கிழக்காசிய நாடுகளிலும் தமிழருடைய கோயில் கட்டடக்கலை செல்வாக்கோடு போற்றப் பெற்றதை இன்றும் நம் காணமுடிகிறது ஆக, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, கட்டடக்கலை ஆகிய நான்கும் பல நூற்றாண்டு களாகத் தமிழருக்குரிய பண்பாட்டு முத்திரையுடன் தோன்றி வளர்ந்து வந்ததைச் சுருக்கமாகப் பார்த்தோம்.

## கலைகளுக்கும் சைவத்திற்கும் இடையிலான தொடர்பு

தமிழரைப் பொறுத்த அளவிற்குச் சைவம் எனத் தனிப்பெயர் சூட்டிக் குறிக்க முடியா விட்டாலும் தொல் தமிழர் சமயம் பாட்டு, ஆடல் என்ற இரு கலைகளோடு சேர்ந்து பிறந்ததை உறுதியாகச் சுட்டிக்காட்ட முடியும். நடுகற்கள் எந்தச் சமய வழிபாட்டைச் சார்ந்தவை என்று குறிக்க முடியாவிட்டாலும் வழிபாட்டிற்கு உரிய தாக இருந்தன என்பதையும் அதனை ஒட்டித் தொடக்கக் காலப்படைப்புச் சிற்பமுறையும், ஓவியமுறையும் தோன்றி வளர்ந்தன என்பதையும் உறுதியாகச் சொல்ல முடியும். சங்க இலக்கியங்கள் சுட்டும் வேலன் வெறியாட்டு, முருக னோடு தொடர்புடையதாகும். வெறியாடல், ஆட லோடு தொடர்புடையது என்பதை எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. அதனைப்போலவே. குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை ஆகியன, பெண்கள் கூட்டமாகக் குழுமி இசையோடு ஆடல் நிகழ்த்தியதைக்காட்டும் சான்றுகள் ஆகும். எனவே பண்டைத்தமிழர் வாழ்வோடு இசையும் ஆடலும் பின்னிப்பிணைந்தே இருந்தன. மேற்கண்ட இரண்டும் சைவ பௌத்த வரவாய் இருந்தவை.

*பிரார்த்தனை பண்ணத் தெரிந்து கொண்டவன் எந்த விபத்துக்கும் அஞ்சுவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடல் பாடல் ஆகியவற்றில் பேரீடுபாடு கொண்டவராக வாழ்ந்த பண்டைய தமிழருக்கு அவற்றை வெறுத்து ஒதுக்கும் சைன, பௌத் தங்கள் வேண்டாதனவாக இருந்ததில் வியப்பு இல்லை. எனவே தான் கி. பி 575க்குப் பிறகு பாண்டியன் கடுங்கோள் வருகையை ஒட்டித் தமிழகத்தில் சைவ, பௌத்தமதங்கள் வீழ்ச்சி அடையத்தொடங்குகின்றன. இதன் அடையாளத் தைத் திருஞானசம்பந்தரின் வரலாற்றிலும் திருநாவுக்கரசரின் வரலாற்றிலும் தெளிவாகப்பார்க் கிறோம். இவ்விருவரும் இன்னிசையால் இறைவ னை வணங்கும் நாயன்மார்களாக வாழ்கின்றனர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன் என்றே பாராட்டப் பெறுகிறார். திருவாரூர் கோயிலில் ஆடலிலும். பாடலிலும் வல்லவராக விளங்கித் தேவரடியராகத் தொண்டு புரிந்து வந்த பரவை நாச்சியாரைச் சைவ நாயன்மார்களில் ஒருவராகிய சுந்தரர் காதலித்து மணம்முடித்து கொள்கிறார். 64 நாயன் மார்களுள் திருநீலகண்ட யாழ்ப்பாணர் இசைத் தமிழோடு மிகநெருக்கமான தொடர்பு உடையவர். எனவே சைவ பௌத்தம் தடுத்து நிறுத்திய இசை ஆடல் கலைகளில் சைவ சமய எழுச்சிக்குப் பிறகு பேரார்வம் காட்டினர் எனலாம்.

இச் சூழலிலே கி. பி 7ஆம் நூற்றாண்டில் பல்லவ நாட்டை ஆண்ட மகேந்திரவர்மனுக்குப் பிறகு தமிழகத்தில் கலைப்பாட்டுடன் சிவன் கோயில்களின் நூற்றுக்கணக்கான ஆயிரக் கணக்கான கோயில்களை ஒட்டி வளர்க்கப்பட்ட இசை, ஆடற் கலைகளையும் சேர்த்து எண்ணுதல் வேண்டும். பல்லவமன்னர்களால் கட்டப்பட்டதாகக் கருதப்பெறும் மாமல்லபுரத்தில் தனிஇசை மண்டப மே இன்றும் உள்ளது. மகேந்திரவர்மனுக்குச் சித்திரகாரப்புலி என்ற பட்டமே இருந்தது. பல்லவ மன்னர்கள் காலத்துச் சைவ ஆலயங்களும் அவற்றை ஒட்டிச்சிற்பங்களும் நிறைய உருவாகின என்பது வரலாறு. பிற்காலச்சோழர் காலத்தில் கடவுளுக்குக் கற்கோயில்கள் கட்டும் போக்கு ஓர் இயக்கமாகவே நடந்தது என்பதைப் பிற்காலச் சோழர் வரலாறு எடுத்துக்காட்டுகிறது. அது மட்டும் அல்லாமல் சோழமன்னர்கள் கட்டடக்கலை யுடன், சிற்பக்கலை, இசைக்கலை, ஓவியக்கலை ஆகியவற்றையும் சேர்த்து வளர்த்தனர். பல்லவா கால காஞ்சிபுர கைலாயநாதர் கோயிலும் அதன் உள் மண்டபத்தில் உள்ள ஓவியங்களும், தஞ்சைப் பெரிய கோயிலும் அதன் உள்மண்டபத் தில் உள்ள ஓவியங்களும் சிவன் கோயில்களுடன் ஓவியக்கலையையும் சேர்த்து வளர்க்கப்பட்டதை எடுத்துரைக்கும் முதன் இராசராசன், தில்லை வாழ அந்தணர் உதவியுடன் தேவாரத்தை கண்டு எடுத்து. இசை அமைத்துப் பல்வேறு இடங்களில் தேவார ஓதுவார்களை நியமித்துப் பாடச்செய்தான் தொடர்ந்து சோழ அரசர்களால் இப்பழக்கம் போற்றப் பெற்றலை வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

தமிழகத்தின் கலை வரலாற்றைக் கூர்ந்து நோக்கினால், அது பெரும்பாலும், சமயத்தைச் சார்ந்தே வளர்ந்து இருக்கிறது என்பதை அறியமுடியும். சமயத்தை விட்டுவிலகி, கலைக்கா கவே கலை எனும் பார்வைக்குரிய தமிழர் கலை வரலாறு ஐரோப்பியர் வரவுவரை அமையவில்லை என்றே கணிக்கலாம். கலை வளர்த்த வரலாற்றில் சைவ சமயத்தின் பங்கு பெரிதாகக் குறிப்பிடத் தக்கது.

*(1995 செப்டெம்பர் 8- 10 திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற உலகசைவப்பேரவை மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரை)*

---

***ஒரு சோம்பேறிக்கு, சிறிய வேலையுங் கூட மிகக் கடினமானதாகவே தோன்றும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இளைஞர்க்காக*

# மகிழ்ச்சியின் முக்கியத்துவம்

மனிதனுடைய முக்கியமான இலட்சியம் எதுவாக இருக்க வேண்டும்?

மனிதன் தான் வாழ்ந்து வரும் வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியையும் நன்கு அனுபவித்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருவது தான் அவனுடைய முக்கியமான இலட்சியமாக இருக்க வேண்டும்.

ஒருவன் அதிகாரம் நிறைந்த பெரிய பதவி வகித்து வரலாம். அவன் பெரிய பணக்காரனாக இருக்கலாம். கடினமான ஆராய்ச் சியின் துணைக் கொண்டு மாபெரும் புதுமையைக்கண்டுபிடித்து தேசிய விருது பெற்றவனாகவும் இருக்கலாம். ஆனால் இவைகளைப் போன்று சாதனை படைத்தவர்கள் சிரித்துக்கொண்டே மகிழ்ச்சியுடன் வாழக்கற்றுக் கொள்ளாவிட்டால், வேதனை மிகுந்த வாழ்க்கை யைத்தான் வாழ்ந்து வருவார்கள்.



புகழும் வசதிகளும் கிடைத்தும் மகிழ்ச்சியுடன் வாழாத ஒருவனை விட, ஓலைக்குடிசையில் தன் மனைவி மக்களுடன் சிரித்துக் கொண்டே சந்தோஷமாக வாழ்ந்து வருபவன் நிறைய அதிர்ஷ்டம் செய்தவன்.

சிரித்து வாழ்ந்து வருவ தைப் பழக்கமாகக் கொண்ட ஓர் ஏழை, சிரிக்கத் தெரியாத பணக்காரனை விட வாழ்க்கையை நன்றாக அனுபவித்து வாழ்ந்து வருவான்.

ஒருவன் சந்தோஷத்தைத் தன் உள்ளத்திற்குள் உருவாக்கிக் கொள்ள முடியும்.

ஒருவனுடைய சந்தோஷ மான வாழ்க்கைக்கு அவனைத் தவிர வேறு யாரும் குறுக்கே நிற்பதில்லை.

---

***பிறர் தவறுகளைச் சுட்டிக்காட்ட நீங்கள் விரல் நீட்டு முன் - ஒரு வினா, உங்கள் கை தூய்மையானதா?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் சந்தோஷமாக வாழ்ந்து வராவிட்டால் அவனிடம் தவறுகள் மிகுந்திருக்கும்.

வாழ்க்கையை அனுபவித்து சந்தோஷமாக வாழ்ந்து வருவது ஒரு பழக்கம்தான். சந்தோஷம் என்பது ஒரு மனநிலைதான்

தேவையில்லாமல் எப்போதும் வருத்தப்பட்டு வரும் பழக்கத்தைத் தவிர்த்து விட்டு, சந்தோஷமாக சிரித்துக்கொண்டு வாழ்ந்து வரும் பழக்கத்தை ஒருவன் கடினமான பயிற்சியின் மூலமாக ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

சந்தோஷத்தைப் பற்றி எப்போதும் நினைத்து - அதைப் பற்றி பேசுவதைப் பழக்கமாக ஏற்படுத்திக் கொண்டு - அடிக்கடி மனம் விட்டுப் பலமாக சிரித்து வருபவன், சந்தோஷமாக வாழ ஆரம்பித்து விடுவதை நாம் பார்க்க முடியும்.

சந்தோஷமாக வாழ ஆசைப்படுவதில் சிறிது கூட தவறில்லை.

சந்தோஷமாக வாழக்கற்றுக்கொண்டவன் தான் மனிதனாகப் பிறந்ததன் முழுப்பயனை அடைகிறான்.

நியாயமான வழிகளில் கிடைக்கும் சந்தோஷத்தை ஒருவன் தன்னுடைய இரண்டு கைகளையும் நீட்டிக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

சந்தோஷம் ஒருவனுடைய உள்ளத்திலேயே அடைபட்டிருக்கிறது. ஆனால் மனிதர்கள் கைகளுக்கு எட்டும் தூரத்தில் சந்தோஷம் இருப்பதை அறிந்துகொள்ளாமல் அதை வெகு தூரத்தில் தேடுகிறார்கள்.

தான் இருக்கும் இடத்திலேயே சந்தோஷத்தை அடையத் தவறியவன், சுவர்க்கத்திற்கே சென்றால் கூட சந்தோஷத்தைக் காண முடியாது.

சந்தோஷமாக வாழ்ந்து வருபவர்களிடம் ஆர்வம் நிறைந்திருக்கும்.

ஆர்வத்துடன் வேலைச் செய்பவர்கள் சீக்கிரம் களைத்து விடுவதிலை. அதனால் அவர்கள் நிறைய வேலைகளைச் செய்து பெரும் புகழும் பெறுகிறார்கள்.

உங்களுக்கு நிறைய நண்பர்கள் தேவைதான். ஆனால் உங்களையே உங்களுக்கு உதவும் முக்கியமான நண்பனாக நீங்கள் மாற்றிக் கொள்ளும் போதுதான் உங்களுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சி கிடைக்கும்.

பெரும்பாலானவர்கள் தங்களுக்குத் தாங்களே எதிரிகளாக செயல்பட்டு வருவதால்தான், அவர்கள் வாழ்க்கையில் சிறிது கூட மகிழ்ச்சி காணாமல் நிறைய துன்பத்தையும், வேதனையையும் அனுபவித்து வருகிறார்கள்.

தன்னைத் தாழ்வாக மதிப்பிட்டுக்கொள்பவன் வாய்விட்டு சிரித்து மகிழ்ச்சியுடன் சில விநாடிகள் கூட வாழ்ந்ததை யாரும் பார்த்திருக்க முடியாது.

மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருபவன் நோயாளியாக இருக்க மாட்டான்.

எப்போதும் வருத்தப்பட்டுக்கொண்டு சலிப்பு நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து வருபவனைத்தான் பல வியாதிகள் சூழ்ந்திருக்கும்.

எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்பார்க்காமல், சட்டங்களை மீறாமல், யாருக்கும் சிறிதுகூட துன்பம் தராமல், சுயநலத்தைத் தவிர்த்து மனிதகுலத்திற்கு சேவை செய்து வருபவனுக்கு சந்தோஷம் கிட்டும்.

மனச்சாட்சியின் குரலுக்கு செவி சாய்ப்பவனுக்கு சந்தோஷம் கிட்டும்.

எந்த வீட்டில் அமைதி நிலைத்திருக்கிறதோ, எந்த வீட்டில் ஒருவருக்கு ஒருவர் பாசத்துடனும்

***கால் இடறினால் நீங்கள் சமாளித்து எழலாம்- நாக்கு இடறினால், ஆழமான வடுவை அது ஏற்படுத்தி விடும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடனும் நடந்துகொள்ளுகிறார்களோ, அந்த வீட்டில்தான் சிரிப்பின் குரலை நாம் கேட்க முடியும்.

தன் லட்சியத்திற்கு உதவும் மனப்பான்மையைத் தேடிக்கொள்பவனுக்குத்தான் சந்தோஷமான வாழ்க்கை அமையும்.

நிறைய மனிதர்கள் தங்கள் மனங்களில் சுய நலத்தைத் தழுவிய எண்ணங்களை நினைத்து வருவதால்தான் இன்றைய உலகில் யுத்தங்கள் தொடர்ந்து நடந்து அழிவை உருவாக்கி வருகி ன்றன; சத்தியத்திற்கும், நியாயத்திற்கும் சாவு மணி அடிக்கப்பட்டு அராஜகம் தலை விரித்தாடி வருவதை நாம் கண்டு வருகிறோம்.

தங்களுடைய மனங்களில் கெட்ட எண்ணங் களை அனுமதிப்பவர்கள் இந்த உலகத்தில் இருக்கும் கெட்ட சக்திகளின் கைகளை ஓங்கச் செய்து நியாயத்தையும், தர்மத்தையும் குழி தோண்டி புதைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருப் போருக்கு உதவி செய்து வருகிறார்கள்.

இதற்கு மாறாக தங்கள் மனங்களை வென்று. கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவர்கள், மனித இனத்திற்கு நன்மை தரும் எண்ணங்களை நினைத்து, அவைகளைச் செய்து முடிக்கப் பாடுபட்டு உழைத்து வருவார்கள். இதனால் நல்ல கலைகள் செழித்து சிறந்த நாகரிகம் உருவாகும்; நாம் வாழ்ந்து வரும் உலகம் அமைதிப் பூங்காவாக மாறும்; மக்கள் ஒருவரை ஒருவர் விரும்பி அன்புடன் நடந்து கொள்வார்கள். மனித வாழ்க்கை தேனாகச் சுவைக்கும்

நாம் வாழ்ந்து வரும் உலகத்தை அழி விலிருந்து காப்பாற்ற நாம் அனைவரும் அமைதி யைப் போற்றி அதைப்பாதுகாக்கும் எண்ணங் களை நினைத்து வர வேண்டும்; அன்பின் பெரு மையை பறைசாற்றும் எண்ணங்களை நினைத்த வரவேண்டும்; நல்ல கலைகளை வளர்க்க உதவும் எண்ணங்களை நினைத்து வர வேண்டும்; மனித இனம் பயன் பெறும் புதுமைகளைப் பற்றிய எண்ணங்களை நினைத்து வர வேண்டும்;

இருப்பதை மற்றவர்களுடனும் பகிர்ந்து கொண்டு மனநிறைவுடன் வாழ்ந்து வருவதைப் பற்றிய எண்ணங்களை நினைத்து வர வேண்டும்.

மனிதன் எப்படி தன் மனதைப் பயன்படுத்திக் கொள்கிறான் என்பதைப் பொறுத்தே அவனது எதிர்கால வாழ்க்கை அமையும்.

நன்றி- இராமகிருஷ்ண விஜயம்

## ஆத்ம சிந்தனை

எல்லாப் பிரச்சனைகளுக்கும் மூலகாரணம் மனம் தான். மனம் கோணலாக இருக்குமானால் எல்லாம் எதிரிடையாக இருக்கின்றன.

"மனமும் வார்த்தையும் ஒன்றுபோலவே இருக்கு மானால், எல்லா ஆன்மீக சாதனைகளிலும் வெற்றி காணலாம்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வது வழக்கம்.

மனதையும் வார்த்தைகளையும் ஒன்றுபடச் செய்வதென்பது மிகவும் உயர்ந்த ஆன்மீகச் சாதனையாகும். உள்ளும் புறமும் ஒன்றுபடாத போதுதான் எல்லாத் தொந்தரவுகளும் அமைதி யின்மையும் ஏற்படுகின்றன.

இறைவனை அடைய வேண்டும் என்ற அருள்தாகம் நல்லது என்றாலும், மனம் அமைதி அடைய வில்லை என்று பொறுமை இழப்பதும், மன முடைந்து போவதும் நல்லதல்ல.

இறைவனை அடைய வேண்டும் என்ற அருள் தாகம் நமக்கு வாய்த்திருந்தால், அதன் பொருட்டு நம்மைப் பாக்கியசாலிகளாகக் கருதிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் மன அமைதியின்மை காரணமாக ஆன்மீகப் பாதையிலிருந்து தவறி விடக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

***உங்களின் இயற்கைச் சுபாவத்திற்கு ஏற்றவாறு வாழுங்கள். மல்லிகையின் மணம், ரோஜா மணத்தினின்றும் வேறுபட்டது இல்லையா?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாளர் வரிசையில்
# கண்ணப்ப நாயனார்

சிவபெருமான் வாயுலிங்கமாக வியாபித்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் புண்ணிய சேஷத்திரம் காளஹஸ்தி எனப்படும் திருக்காளாத்தி. இந்தத்தலத்தில் சிவபெருமான் நிகழ்த்திய அற்புதங்களில் ஒன்றனுள் அடங்குவதுதான் கண்ணப்ப நாயனார் சரித்திரம்.

ஸ்வர்ணமுகி ஆற்றின் கரையில் இருந்த அடர்ந்த காட்டில் பன்னெடுங்கால முன்பு திண்ணனார் என்ற வேடன் ஒருவன் வாழ்ந்து வந்தான். குலத்தால் வேடன் என்றாலும் சிவபெருமானிடத்து பக்தியும் ஈடுபாடும் கொண்டிருந்தான் திண்ணன்.

ஒரு நாள், வழக்கம் போல வேட்டைக்குச் சென்ற திண்ணனார், அன்று பகல் முழுவதும் காட்டில் அலைந்து வேட்டையாடுவதற்கு எந்த மிருகமும் கிடைக்காமல் களைத்துப் போனான். பசியும் தாகமும் அவனை வாட்டியது. மாலை நேரம் அது. அப்போது திடீரென்று, தூரத்தில் ஒரு காட்டுப்பன்றி தென்பட்டது. அதை வேட்டையாடத் திண்ணன் குறி வைத்தான். பன்றி சுவர்ணமுகி கரையோரமாக ஓட ஆரம்பித்தது. திண்ணன் அதன் பின்னால் ஓடினான். ஆற்றின் கரையில் ஓர் இடத்தில் பன்றி காணாமல் போயிற்று அங்கு திண்ணன் கண்ட காட்சி அவனை மெய் சிலிர்க்க வைத்தது. அங்கு அவன் கண்டது ஒரு சிவலிங்கம்தான். அதனை அவன் சிவலிங்கமாகப் பார்க்காமல் சிவபெருமானாகவே பார்த்தான்.

"இறைவா! நீ இப்படி கூரை கூட இல்லாமல் வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து அவதிப்படுகிறாயே? பசித்தால் உனக்கு இந்த வனத்தில் யார் உணவு தருவார்கள்? நல்ல வேளை நான் இங்கு வந்து சேர்ந்தேன்" என்று கூறி அருகிலுள்ள மரங்களின் கிளைகளை வெட்டி லிங்கத்திற்கு மேல் கூரை போட்டான். வனத்தின் உள்ளே சென்று இலைகளையும் மலர்களையும் பறித்து சிவனுக்கு ஆடையாக அணிவித்தான். அப்போது எதிர்ப்பட்ட ஒரு பறவையை அடித்து நெருப்பில் சுட்டு அதன் மாமிசத்தை உணவாக சமைத்தான். ஒரு கையில், தான் வைத்திருந்த மாமிசத்தைக் கோர்த்து மற்றொரு கையில் மலர்களையும் இலை தழைகளையும் எடுத்துக் கொண்டு, சிவனுக்கு அபிஷேகத்திற்கான நீரை தன் வாயிலும் வைத்துக் கொண்டான்.

பெற்ற தாய் ஒருத்தி தன் பிள்ளையைக் குளிப்பாட்டி ஆடையுடுத்தி பாலூட்டி, அரவணைப்பதைப் போல், பக்தியும் அன்பும் பெருக சிவனுக்கு தன் வாயிலிருந்து உமிழ்ந்து, (நீரை) அபிஷேகம் செய்து, காட்டு மலர்களைச் சூட்டி, மாமிசத்தை நிவேதனமாகப் படைத்தான். அன்பே சிவமல்லவா? ஆகவே கொடுக்கின்ற பொருளைப் பற்றிக் கவலைப்படாமல் கொடுக்கின்றவனின் உள்ளத்தில் மேலூன்றி நிற்கும் அன்பிற்கும், பக்திக்கும் கட்டுப்பட்டு அதனை ஏற்றுக் கொண்டான் சிவபெருமான்.

எந்தவிதமான ஆசாரங்களையும் பூசா முறைகளையும் அறிந்திடாத திண்ணன் தன் மனதுக்கு சரி என்று பட்ட முறையில் சிவ ஆராதனை

***வாழ்வின் பல நிலைகளில் நாம் போலியாக முகமூடிகளை அணிந்து கொண்டிருக்கிறோம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து அங்கிருந்து புறப்பட்டான்.

சிவபெருமான் எழுந்தருளிய இவ்வனத்திற்கு அருகிலுள்ள கிராமம் ஒன்றில் சிவகோசரியார் என்ற அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தினமும் இவ்விடத்திற்கு அதிகாலை வந்து புனித நீரால் சிவனுக்கு அபிஷேகம் செய்து மந்திரம் ஓதி வில்வ தளங்களால் அர்ச்சித்து, சுத்தமான அன்னத்தை நிவேதனம் செய்து சாஸ்திர முறைப்படி பூசை செய்வது வழக்கம். அன்றைய தினம் பூசைக்காக வந்த சிவகோசரியார் சிவலிங்கம் இருந்த நிலை கண்டு அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தார். ஏதோ கொடிய வனவிலங் குகள் மாமிசத் துண்டை இழுத்து வந்து அங்கு போட்டிருக்குமோ? என ஐயுற்றார்! ஆனால் லிங் கத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த பந்தலையும் அங்கு போடப்பட்டிருந்த இலைகளையும் தழை களையும் பார்த்து, இது யாரோ காட்டுமிராண்டி, செய்த அபசாரம் என ஊகித்தார். அவனுக்காக இறைவனிடம் மன்னிப்பு கோரினார். மீண்டும் அவ்விடத்தை சுத்தம் செய்து அபிஷேக ஆரா தனைகள் செய்து முடித்துத்திரும்பினார்.

மாலை வெயில் மங்க ஆரம்பித்தது. இருள் சூழும் வேளையில் மீண்டும் திண்ணன் முந்தைய நாளைப் போல் தனது ஆராதனைக்கான பொருள் களுடன் சிவபெருமானிடம் வந்து சேர்ந்தான். தான் அமைத்த கூரையும், சிவனுக்கு சாத்திய ஆடையும் அங்கு இல்லாதது கண்டு மனம் குமுறினான். எவனோ ஒரு பாவி சிவனுக்கு தீங்கு செய்ததாக எண்ணி அவனை வைதான். முந்தைய மாலையைப் போலவே சிவனுக்கு அபிஷேகம் செய்து, அலங்காரம் செய்து, தான் கொண்டு வந்த மாமிசத்தை அமுதாகப் படைத் தான்.

இவ்வாறு பகலில் சிவகோசரியாரும் மாலையில் திண்ணனாரும் காளத்திநாதனுக்கு ஆறு நாட்கள் ஆராதனை செய்தனர். ஆறாம் நாள் சிவ கோசரியார் மனம் உடைந்து போய், இறைவனிடம் முறையிட்டார். "இறைவா! இது என்ன கொடுமை! யார் செய்யும் தீவினை இது? இதை நான் தெரிந்து கொள்ளாவிடில் இவ்விடத்திலேயே உயிர் மாய்த்துக் கொள்வேன்" என்று கதறினார். அப்போது இறைவனின் அருள்வாக்கு ஒலித்தது. "சிவகோசரியாரே! மாலை வரை இங்கு மறைந் திருந்து நடப்பதைக் கவனி, அப்போது உண்மை விளங்கும்" சிவகோசரியாரும் இறைவன் இட்ட கட்டளைப்படியே அங்கு மறைந்து கொண்டார்.

கதிரவன் மறைந்தவுடன் திண்ணன் வழக்கம் போல் வந்து பூசை செய்தான். திடீரென லிங் கத்தின் கண்களிலிருந்து ரத்தம் வடிவதைக் கண்டான் திண்ணன். அதிர்ச்சியும் மனக்கலக் கமும் அடைந்தான். சிவலிங்கத்தின் கண் ணிலிருந்து வடியும் ரத்தத்தைத் துடைத்து பார்த்தான். அது நிற்கவில்லை. அருகில் வளர்ந் திருந்த பச்சிலைகளையும், மூலிகைகளை யும் எடுத்து கசக்கி ரத்தம் வடியும் லிங்கத்தின் கண் களில் தடவிப் பார்த்தான். அப்போது குருதியும் நிற்கவில்லை. திண்ணன் பதறினான். கண்ணீர் வடித்தான். ஓவெனக் கதறினான். திடீரென அவன் மனதில் ஓர் எண்ணம் தோன்றி யது, ஊனுக்கு ஊன் கொடுத்தால் ஊனம் நீங்கும் என்பதே அவ்வெண்ணம். குருதி வடியும் சிவனின் கண்ணில் தன் கண்ணை எடுத்து அப்ப உறுதி கொண்டான் திண்ணன். சிறிதும் தயக்கமின்றி தன்கண் ஒன்றை அம்பினால் தோண்டி, சிவ பெருமானின் கண்ணில் அப்பினான். குருதி வடிவது நின்றது. ஆனால் திண்ணன் கண்ணில் குருதி வடிந்து கொண்டிருந்தது. வலியும் வேத னையும் அவனுக்குத் தெரியவில்லை. இறைவ

***கவனக்குறைவினால் தவறுகள் நிகழ்கின்றன -அதனால் மனதின் சமநிலை கெடுகிறது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின் நோய் தீர்த்த பெருமகிழ்ச்சியில் அவன் ஆனந்தக் கூத்தாடினான். ஆனால் அவன் மகிழ்ச்சி அதிகநேரம் நீடிக்கவில்லை. திண்ணனாரின் தீவிர பக்தியை உலகுக்கு எடுத்துக் காட்ட எண்ணிய இறைவன் தன் சோதனையை தொடர்ந்தான். இறைவனின் இரண்டாவது கண்ணில் குருதி வடிய ஆரம்பித்தது. திண்ணன் மீண்டும் பதறினான். "இறைவா! இது என்ன வேதனை உனக்கு? என்று துடித்தான். சற்றும் சிந்தியாமல் தன் அடுத்த கண்ணையும் எடுத்து இறைவனுக்கு அப்ப முன்வந்தான். தன் இரண்டாவது கண்ணையும் எடுத்து விட்டால அதை எந்த இடத்தில் அப்புவது என்று தெரியாமல் போய் விடுமே என்பதற்காக தன் கண்ணைத் தோண்டு வதற்கு முன்பு, இறைவனின் கண்ணிருக்கும் இடத்தை அடையாளம் வைத்துக் கொள்வதற் காக, தன் கால்களால் லிங்கத்தைத் தொட்டுக் கொண்டு, தன் கண்ணைத் தோண்ட ஆயத்த மாகும் போது, இறைவன் பிரத்யட்சமாகி "நில் கண்ணை அப்ப" என்று பொருள் பட "நில்லு கண்ணப்ப" என்று கூறி திண்ணனைத் தடுத்து அருள் பாலித்தான்.

இத்தனையையும் மறைந்து நின்று பார்த்துக் கொண்டிருந்த அந்தணர் சிவகோசரியார் மெய் சிலிர்க்க ஓடிவந்து இறைவனின் திருவடிகளில் விழுந்து வணங்கி நின்றார். திண்ணனாரும் தனது ஊனமுற்ற கண்ணை மீண்டும் பெற்று பூரண பொலிவோடு இறைவனைத் தரிசித்தார். அப்போது சிவபெருமான் "சிவகோசரியாரே! ஆகம தர்மப்படி வைதீக முறை வழுவாது நீவிர் செய்த ஆராதனை சிவபூசையாகும். அதனையும் நாம் அன்புடன் ஏற்றோம். பூசை முறைகள் எதுவும் தெரியாமல் அன்பு ஒன்றே திண்ணன் செய்த ஆராதனை சிவசேவையாகும். அதிலும் நாம் மகிழ்ச்சி அடைந்தோம். எனக்காக தன் கண்ணை யே எடுத்து அப்பிய இவன் கண்ணப்பன் என்று வழங்கப்படுவான். உங்கள் இருவராலும் இத்தலம் பெருமை பெற்றது என்று கூறி மறைந்தார்.

இவ்வாறு வேடன் திண்ணன் கண்ணப்ப நாய னாராகி அறுபத்தி மூவரில் ஒருவராய் இருந்து அருள்பாலித்து வருகிறார்.

## மௌனம்

நம்முடைய இந்திரியங்களிலேயே அதிக சக்தி வாய்ந்தது நாக்கு. அதனாலேயே நமக்குத் தடைகளை ஏற்படுத்தி, சாதனை களில் குறுக்கிடும் விஷமத்தனமும் அதில் அடங்கி இருக்கிறது. அதை அடக்கவே மௌனத்தை ஆயுதமாக நாம் பயன் படுத்துகிறோம். வாய்ச்சொல் அடங்கும்போது, மனம் வழிக்கு வரு கிறது. மற்றச் சிந்தனைகளிலிருந்து திரும்பி அடக்கம் பெறுகிறது. நாக்கு ஓய்வு பெறும்போது, மூளையின் சக்தி விழித்துக் கொண்டு வலுப்பெறுகிறது. கூர்ந்து சிந்திக்கவும், மனத்தை ஆடாமல் வைத்துக் கொள்ளவும் முயலுகிறது. அந்தநிலையில் இறைவனைப்பற்றி நினைத்து தியானிப்பதும் எளிதாகிறது. அதனாலேயே மௌனவிரதம் பக்தி மார்க்கத்தில் ஒரு மிக முக்கியமான சாதனமாகப் பயன்படுத்தப்படுகிறது.

-ஸ்ரீசத்தியசாயிபாபா

***ஏனைய மனிதர்களுடன் உங்களை ஒப்பீட்டுக் கொண்டிருந்தீர்களானால், ஆணவத்தால் அல்லது பொறாமையால் வருந்த நேரும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவராத்திரி கலைநிகழ்ச்சிகளில் நாட்டிய ஷேத்ரா மாணவியின் பரதநாட்டிய நிகழ்ச்சியையும் திருமதி. அனுஷியா தர்மராஜா நட்டுவாங்கம் இசைப்பதையும் செல்வன். ஹரி பாஸ்கரன் கர்நாடக இசை வழங்குவதனையும் படத்திற் காணலாம்.



இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற சொற்பொழிவு நிகழ்ச்சியில் ஜப்பானியப் பேராசிரியர் நொபொரு கராஷிமா அவர்கள் உரை நிகழ்த்துவதையும், நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பிரதித் தலைவர் பேராசிரியர் எஸ். பத்மநாதன், கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. இ. யோகநாதன், திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் ஆகியோரையும் படத்திற் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்குள்ள நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சோழர்களின் அரசியல் கலாசார வரலாறு 1 | ரூ. | 35. 00 |
| | சோழர்களின் அரசியல் கலாசார வரலாறு 2 | ரூ. | 22. 00 |
| 2. | தமிழ்நாட்டு வரலாறு - சங்ககாலம் (வாழ்வியல்) | ரூ. | 86. 00 |
| 3. | கூட்டாட்சி அரசாங்கம் | ரூ. | 10. 50 |
| 4. | வ. உ. சி. வரலாறும் - இலக்கியப் பணிகளும் | ரூ. | 120. 00 |
| 5. | கமலாம்பாள் சரித்திரம் | ரூ. | 100. 00 |
| 6. | பத்மாவதி சரித்திரம் | ரூ. | 100. 00 |
| 7. | பிரதாப முதலியார் சரித்திரம் | ரூ. | 132. 50 |
| 8. | விமர்சனத் தமிழ் | ரூ. | 137. 50 |
| 9. | புதுக்கவிதையில் சமுதாயம் | ரூ. | 150. 00 |
| 10. | தற்கால அரசியல் அமைப்புகள் | ரூ. | 51. 00 |
| 11. | அரசியல் அமைப்புகள் ஓர் ஒப்பீடு | ரூ. | 31. 00 |
| 12. | தமிழ்நாட்டு வரலாறு (அரசியல்) சங்ககாலம் | ரூ. | 102. 25 |
| 13. | அகநானூறு | ரூ. | 62. 50 |
| 14. | நந்திக் கலம்பகம் | ரூ. | 70. 00 |
| 15. | இலக்கிய மரபு | ரூ. | 75. 00 |
| 16. | ஈழத்துச் சித்தர்கள் | ரூ. | 56. 00 |
| 17. | நாட்டுப்புறவியல் ஆய்வு | ரூ. | 187. 50 |
| 18. | குறவஞ்சி இலக்கியம் | ரூ. | 100. 00 |
| 19. | பட்டிமண்டப வரலாறு | ரூ. | 125. 00 |
| 20. | மொழிவளர்ச்சி | ரூ. | 37. 50 |
| 21. | நாவல் வளர்ச்சி | ரூ. | 275. 00 |
| 22. | பண்டைய தமிழகம் | ரூ. | 375. 00 |
| 23. | முல்லைப்பாட்டு | ரூ. | 20. 00 |
| 24. | வெள்ளிப் பாதசரம் | ரூ. | 200. 00 |
| 25. | கல்வி உளவியல் கருத்துக்கள் | ரூ. | 75. 00 |

இவற்றுடன் ஆன்மீக, தமிழ்த்துறை சார்ந்த நூல்கள், திணைக்கள வெளியீடுகள் என்பன திணைக்கள விற்பனை நிலையத்தில் விற்பனைக்குள்ளன. காரியாலய நாட்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org